
உ

திருச்சிற்றம்பலம்

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை"

சைவத்திருமுறைகளிலிருந்து சில முத்துக்கள்



திருவளர் நம்பி : **G. கார்த்திகேயன்**

திருவளர் நங்கை : **R. ரம்யா**

ஆகியோரது திருப்பெருக திருமண நாளன்று அடியார்களின் திருவடிக்களுக்கு அணியப்பட்டது

மணநாள் : **11 - 11 - 2002**

மங்கல இடம் : **பிரேம் மஹால், கரூர்**

திருச்சிற்றம்பலம்

அப்பன் நீ அம்மைநீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓர்ஊரும் நீ
துய்ப் பனவும் உய்ப் பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய்நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்து நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே !

- திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பணிந்துரை

...வன் உய்யக் கொள்ளும் வண்ணம் புவனியில் போய்ப்பிறக்கும் ஒப்பற்ற வாய்ப்பை கருணையே வடிவான கண்ணுதல் கடவுள் நமக்கு அருளியுள்ளார்.

அரிய இப்பிறவியின் நன்மையை நாம் அடைய வேண்டுமெனில்,

"சில்லாண்டிற் சிதையும் சில தேவர் சிறுநெறி சேராமே" ஆதியும் அந்தமும் இல்லா சிவபெருமான் திருவடிக்கு பற்று வைத்து, கைம்மாறு தெரிவிக்கும் வகையில் வழிபாடு செய்வதொன்றே வழியாகும்.

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும், தாழ்த்த சென்னியும் தந்த" இறைவனை அனைவரும் எளிதில் வாழ்த்துவதற்கும், நினைப்பதற்கும் உலகர்க்குத் துணையாகக் கிடைத்துள்ள பெருஞ்செல்வம் சைவத் திருமுறைக்ள் ஆகும்.

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் எம் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் - முற்கோலி
வந்திலரேல், நீறு எங்கே? மாமறை நூல்தான் எங்கே?
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங்கே?

தலமேழும் பாலிக்கும் தகைமையுடைய சைவநெறி உலகில் நிலைப்பதற்குக் காரணம் நால்வர் பெருமக்களே என்பதை மேற்கூறிய செய்யுள் மூலம் நாம் உணரலாம். ஆச்சாரியப் பெருமக்களாகிய இவர்கள் முழு முதற்கடவுளாகிய சிவன் ஆற்றும் ஐந்தொழில்களையும் ஆற்றவல்லவர்கள் என்பதை இவர்கள் நிகழ்த்திய எண்ணிலாத அற்புதங்கள் பறை சாற்றுகின்றன.

முற்றறிவுடைய இறைவன் அருளே திருமேனியாகக் கொண்டு எழுந்தருளி, திருவருள் கைவர ஐம்புலன்களையும் வென்று தெய்வீகத் தன்மையராகிய இச்செம்புலச் செல்வர்கள், இறைவனே இவர்கள் உள்நின்று உணர்த்த, தங்களது திருவாக்காக வெளிப்படுத்தி அருளியதே சைவத்திருமுறைகளாகும்.

தன்னை நினைந்து, நினைந்து உருகும் அடியார்களுக்குத் தேனும், பாலும் கலந்த பழத்தின் சுவையினும் இனிமை பொருந்திய தெவிட்டாத இன்பத்தை அமுது ஊற ஊற நினையுங்கால் உடனிருந்தும், அல்லாக்கால் தோன்றாத் துணையாயிருந்தும் அருள்புரியும் செங்கண் விடையார் சிவபெருமானையே பொருளாகக் கொண்டு போற்றும் பொங்கும் இசைபொருந்திய திருமுறைகள் கூடிய அமுதக் கடலிலிருந்து சில முத்துக்களை எடுத்து ஆளுரும் தமிழ் மாலையாகக் கோத்து இந்த வெளியீட்டை, எங்கள் குமாரன்

செல்வன் ஜி. கார்த்திகேயனுக்கு

செல்வி ஆர். ரம்யாவுடன்

11.11.2002 அன்று நிகழும் திருமண விழாவின் போது சிவனடியே சிந்திக்கும் அடியார்களாகிய தங்களுக்கு அளித்து, தங்கள் திருவடிகளை வணங்கி, மகிழ்ந்து, தங்கள் பேரன்பையும் திருமுறை உணர்வு நிறைந்த வாழ்த்துக்களையும் பணிவுடன் வேண்டுகிறோம்.

"என்பொன் ஈசன் இறைவனென் றுள்குவார்க்கு
அன்பன் ஆயிடும் ஆனைக்கா அண்ணலே"

திருச்சிற்றம்பலம்

Er. K. குருசாமி
மல்லிகா குருசாமி

ஆச்சாரியர்கள் துதி

நால்வர் வணக்கம்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில்அணைந்தபிரான் அடி போற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள் போற்றி.

திருஞானசம்பந்த சுவாமிகள்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மை திகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன்: பேருலகில்
ஒரு நாவுக் குரைசெய்ய ஒண்ணாமை உணராதேன்

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

தொழுதும் வணங்கியும் மாலயன் தேடருஞ் சோதிசென்றாங்கு
எழுதும் தமிழ்ப்பல ஆவணம் காட்டி எனக்குஉன்குடி
முழுதும் அடிமைவந் தாட்செய் எனப்பெற்ற வன்முரல்தேன்
ஒழுகு மலரின்நற் றார்எம்பி ரான்நம்பி யாரூரனே

மாணிக்கவாசக சுவாமிகள்

எழுதரு மறைகள் தேறா இறைவனை எல்லிற் கங்குற்
பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாதுசெய்து
தொழுதகை தலைமீதேறத் துளும்புகண் ணீருள்மூழ்கி
அழுதடி யடைந்த அன்ப னடியவர்க் கடிமை செய்வாம்

சேக்கிழார் பெருமான், நாயன்மார்கள்

தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாம் திருத்தொண்டத் தொகையடியார் பதம் போற்றி:
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் அடி போற்றி:

முதல் திருமுறை

தொல்வினை தீர்க்கும் திருப்பதிகம்

சைவமுதலாகிய வைதிகம் தழைத்தோங்கவும், திருநீற்று நெறி எங்கும் சிறந்து நிலைபெறவும் செய்து உலகம் உய்ய திரு அவதாரம் செய்த திருஞானசம்பந்தர், தமது மூன்றாவது வயதில் ஒருநாள், நீராடச்சென்ற தம் தந்தையாருடன் தாமும் சென்றார். குழந்தையை குளக்கரையில் இறைவன் பொறுப்பில் விட்டுவிட்டு, தந்தை குளத்தில் இறங்கி நீராட, தனித்து விடப்பட்ட திருஞான சம்பந்தர், பண்டு திருவடி மறவா பான்மையால் அழத்தொடங்கினார். அவர் அழுகையைக் கேட்ட தோணிபுரத்து ஈசன் அம்மையுடன் எழுந்தருளி, ஐயன் கூறியபடி அம்மை சிவஞானம் குழைத்த திருமுலைப்பாலை ஊட்ட, இவர் சிவஞானம் பெற்றவரானார்.

நீராடி வந்த தந்தையார், பாலுண்ட நிலையில் இருந்த குழந்தையைக் கண்டு "பால் கொடுத்தவர் யார்" என்று கேட்கவும், மகிழ்ச்சியில் திளைத்திருந்த ஆளுடைய பிள்ளையார் தனக்கு எதிரில் எழுந்து அருளியிருக்கும் தோணிபுரத்து ஈசனை கைவிரலால் சுட்டிக்காட்டி, பெருமானின் அடையாளங்களைக் கூறி, **"பெம்மான் இவனன்றே"** என்னும் மகுடம் கூடிய, தொல்வினை தீர்க்கும் இத்திருநெறிய தமிழ்ப்பதிகத்தை அருளிச்செய்தார்.

திருச்சிற்றம்பலம்

பண் - நட்டபாடை

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்த அருள் செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 1

முற்றலாமையிள நாகமோடேன முளைக்கொம்பவை பூண்டு
வற்றலோடுகல னாப்பலிதேர்ந்தென துள்ளங்கவர் கள்வன்
கற்றல் கேட்டலுடை யார்பெரியார்கழல் கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே 2

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தவின வெள்வளை சோரவென் னுள்ளங்கவர்கள்வன்
ஊர்பரந்தவுல கின்முதலாகிய வோரூரி துவென்னப்
பேர்பரந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே 3

விண்மகிழ்ந்தமதி லெய்ததுமன்றி விளங்குதலையோட்டில்
உண்மகிழ்ந்துபலி தேரியவந்தென துள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தஅர வம்மலர்க்கொன்றை மலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 4

ஒருமைபெண்மையுடை யன்சடையன்விடை யூரும்மிவனென்ன
அருமையாகவுரை செய்யமர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததோர் காலம்மிதுவென்னப்
பெருமைபெற்றபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே 5

மறைகலந்தவொலி பாடலோடாடல ராகிமழுவேந்தி
இறைகலந்தவின வெள்வளைசோரவென் னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடி யார்பொழில் நீடுயர் சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே 6

சடைமுயங்குபுன லன்னனலன்னெரி வீசிச்சதிர்வெய்த
உடைமுயங்குமர வோடுழிதந்தென துள்ளங்கவர்கள்வன்
கடல்முயங்குகழி சூழ்குளிர்கானலம் பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 7

வியரிலங்குவரை யுந்தியதோள்களை வீரம்விளைவித்த
உயரிலங்கையரை யன்வலிசெற்றென துள்ளங்கவர்கள்வன்
துயரிலங்கும்முல கிற்பலவூழிக டோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 8

தாணுதல்செய்திறை காணியமாலொடு தண்டாமரையானும்
நீணுதல்செய்தொழி யந்நிமிர்ந்தானென துள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்மக ளீர்முதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல் செய்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 9

புத்தரோடுபொறி யில்சமணும்புறங் கூறநெறிநில்லா
ஒத்தசொல்லவுல கம்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறு கவ்வுரிபோர்த்ததோர் மாயம்மிதுவென்னப்
பித்தர்போலும்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 10

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர்மேய
பெருநெறியபிர மாபுரமேவிய பெம்மானிவன் தன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம் பந்தன்னுரை செய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்தலெளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்

இடர்களையும் பதிகம்

திருஞான சம்பந்தர், காவிரியின் வடகரை திருத்தலங்களை வழிபட்டு, கொங்குநாட்டில் திருநணா வரை சென்று பணிந்து, சோழநாட்டுக்குள் திரும்பி, திருநெடுங்களம் உள்ளிட்ட காவிரியின் தென்கரைப் பதிகள் பலவற்றை வணங்கினார். அவர் திருநெடுங்களத்துக்குச் சென்ற போது, "இடர்களையாய் நெடுங்களம் மேயவனே" என்னும் ஈற்றடியை பாடல்தோறும் கொண்ட இடர்களையும் திருப்பதிகத்தை அருளிச்செய்தார். அன்றாட உலக வாழ்வில் எதிர்ப்படும் இடர்களை நீக்கம் செய்ய இப்பதிகம் உதவும் என்னும் பொதுக் கருத்தையே, இப்பதிகத்தின் பொருளாக கருத இடமிருந்தாலும், "உண்மையான இடர் என்பது, சிவபெருமானுக்கு அன்புடன் கூடிய வழிபாடு செய்வதற்கு ஏற்படும் இடையூறுகளே" என்னும் நுண்பொருள், "நின்பால் நெஞ்சம் செலாவகை நேர்விலக்கும் இடும்பைகள் தீர்த்தருள்வாய் என்னும் இன்னிசை மாலை" என்று வரும் பெரியபுராண வரி உணர்த்துகிறது.

திருச்சிற்றம்பலம்

பண் : பழந்தக்கராகம்

மறைஉடையாய் தோல்உடையாய் வார்சடை மேல்வளரும்
பிறைஉடையாய் பிஞ்ஞகனே என்னு உனைப் பேசின் அல்லால்
குறைஉடையார் குற்றம்ஓராய் கொள்கையினால் உயர்ந்த
நிறைஉடையார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே

கனைத்து எழுந்த வெண்திரை சூழ்கடலிடை நஞ்சு தன்னைத்
தினைத் தனையாமிடற்றில் வைத்த திருத்திய தேவ நின்னை
மனத்து அகத்து ஓர் பாடல் ஆடல் பேணி இராப் பகலும்
நினைத்து எழுவார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே.

நின் அடியே வழிபடுவான் நிமலா நினைக் கருத
என் அடியான் உயிரை வவ்வேல் என்று அடல் கூற்று உதைத்த
பொன் அடியே பரவி நாளும் பூவொடு நீர் சுமக்கும்
நின் அடியார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே

மலை புரிந்த மன்னவன் தன்மகளை ஓர் பால் மகிழ்ந்தாய்
அலை புரிந்த கங்கை தங்கும் அவிர்சடை ஆரூரா
தலை புரிந்த பலி மகிழ்வாய் தலைவ நின் தாள் நிழல் கீழ்
நிலை புரிந்தார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே

பாங்கின் நல்லார் படிமம் செய்வார் பார் இடமும் பலி சேர்
தூங்கி நல்லார் பாடலோடு தொழு கழலே வணங்கித்
தாங்கி நில்லா அன்பினோடும் தலைவ! நின் தாள் நிழல் கீழ்
நீங்கி நில்லார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே

விருத்தன் ஆகிப் பாலன் ஆகி வேதம் ஓர் நான்கு உணர்ந்து
கருத்தன் ஆகிக் கங்கையாளைக் கமழ் சடைமேல் கரந்தாய்
அருத்தன் ஆய ஆதி தேவன் அடி இணையே பரவும்
நிருத்தர் கீதர் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே

கூறு கொண்டாய் மூன்றும் ஒன்றாக்கூட்டி ஓர் வெங்கணையால்
மாறு கொண்டார் புரம் எரித்த மன்னவனே! கொடி மேல்
ஏறு கொண்டாய் சாந்தம் ஈது என்று எம்பெருமான் அணிந்த
நீறு கொண்டார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே

குன்றின் உச்சி மேல் விளங்கும் கொடி மதில் சூழ் இலங்கை
அன்றி நின்ற அரக்கர் கோனை அருவரைக் கீழ் அடர்த்தாய்
என்று நல்ல வாய்மொழியால் ஏத்தி இராப் பகலும்
நின்று நைவார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே

வேழ வெண்கொம்பு ஒசித்த மாலும் விளங்கிய நான்முகனும்
சூழ எங்கும் நேட ஆங்கு ஓர் சோதியுள் ஆகி நின்றாய்
கேழல் வெண்கொம்பு அணிந்த பெம்மான் கேடு இலாப் பொன் அடியின்
நீழல் வாழ்வார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே

வெம்சொல் தம்சொல் ஆக்கி நின்ற வேடம் இலாச் சமணும்
தஞ்சம் இல்லாச் சாக்கியரும் தத்துவம் ஒன்று அறியார்
துஞ்சல் இல்லா வாய்மொழியால் தோத்திர நின்அடியே
நெஞ்சில் வைப்பார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே

நீட வல்ல வார் சடையான் மேய நெடுங்களத்தைச்
சேடர் வாழும் மா மறுகில் சிரபுரக்கோன் நலத்தால்
நாட வல்ல பனுவல் மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல் பத்தும் பாட வல்லார் பாவம் பறையுமே.

திருச்சிற்றம்பலம்

இரண்டாம் திருமுறை

கருவூர் ஆனிலைத் தேவாரம்

கவுணியர்குல தீபமாகிய திருஞான சம்பந்தர், தமது ஐந்தாவது திரு யாத்திரையில், திருநணா வழிபட்டு, கீழ்திசைநோக்கிப் புறப்பட்டு திருக்கொடிமாடச் செங்குன்றோ, திருப்பாண்டிக் கொடுமுடி, வெஞ்சமாக்கூடல் முதலிய திருப்பதிகளை வணங்கி திருக்கருவூர் ஆனிலையை அடைந்து வழிபட்ட போது அருளிச்செய்தது இத்திருப்பதிகம். திருக்கருவூர் இறைவனாகிய ஆனிலையப்பரை "அருள் ஈயும் வண்ணர்" என்று அறிமுகப்படுத்தும் சம்பந்தரின் நயம் நோக்கி மகிழத்தக்கது.

திருச்சிற்றம்பலம்

பண் - இந்தளம்

1. தொண்டெ லாமலர் தூவி யேத்தநஞ்சு
உண்ட ஆருயிர் ஆய தன்மையர்
கண்ட னார்கரு வூருள் ஆநிலை
அண்ட னாரருள் ஈயும் அன்பரே.

2. நீதி யார்நினைந் தாய நான்மறை
ஓதி யாரொடுங் கூட லார்குழைக்
காதி னார்கரு வூருள் ஆநிலை
ஆதி யாரடி யார்தம் அன்பரே.

3. விண்ணு லாமதி சூடி வேதமே
பண்ணு ளார்பர மாய பண்பினர்
கண்ணு ளார்கரு வூருள் ஆநிலை
அண்ண லார் அடி யார்க்கு நல்லரே

4. முடியர் மும்மத யானை யீருரி
பொடியர் பூங்கணை வேளைச் செற்றவர்
கடியு ளார்கரு வூருள் ஆநிலை
அடிகள் யாவையும் ஆய ஈசரே.

5. பங்கை யம்மலர்ப் பாதர் பாதியோர்
மங்கை யர்மணி நீல கண்டர்வான்
கங்கை யர்கரு வூருள் ஆநிலை
அங்கை யாடர வத்தெம் அண்ணலே

6. தேவர் திங்களும் பாம்புஞ் சென்னியில்
மேவர் மும்மதில் எய்த வில்லியர்
காவ லர்கரு வூருள் ஆநிலை
மூவ ராகிய மொய்ம்ப ரல்லரே.

7. பண்ணி னார்படி யேற்றர் நீற்றர்மெய்ப்
பெண்ணி னார்பிறை தாங்கு நெற்றியர்
கண்ணி னார்கரு வூருள் ஆநிலை
நண்ணி னார்நமை யாளு நாதரே.

8. கடுத்த வாளரக் கன்க யிலையை
எடுத்த வன்தலை தோளுந் தாளினால்
அடர்த்த வன்கரு வூருள் ஆநிலை
கொடுத்த வன்அருள் கூத்த னல்லனே.

9. உழுது மாநிலத் துஏனமாகிமால்
தொழுது மாமல ரோனுங் காண்கிலார்
கழுதி னான்கரு வூருள் ஆநிலை
முழுது மாகிய மூர்த்தி பாதமே.

10. புத்தர் புன்சமண் ஆதர் பொய்யுரைப்
பித்தர் பேசிய பேச்சை விட்டுமெய்ப்
பத்தர் சேர்கரு வூருள் ஆநிலை
அத்தர் பாதம் அடைந்து வாழ்மினே.

11. கந்தமார் பொழிற் காழி ஞானசம்
பந்தன் சேர்கரு வூருள் ஆநிலை
எந்தை யைச்சொன்ன பத்தும் வல்லவர்
சிந்தை யில்துயர் ஆய தீர்வரே.

திருச்சிற்றம்பலம்

கோளறு திருப்பதிகம்

சண்பை வேந்தர் சம்பந்தரும், தமிழ்மொழித் தலைவர் நாவரசரும் திருமறைக்காட்டில், பெருமான் திருவடியைப் பணிந்து பதிகம் பாடி வந்த காலத்தில், பாண்டி நாட்டில் சமணம் முழு ஆதிக்கம் பெற்றிருந்தது. பாண்டிமா தேவி மங்கையர்க்கரசி, அமைச்சர் பெருநம்பி குலச்சிறை ஆகிய இருவர் நீங்கலாக பாண்டி நாட்டு அனைத்து மக்களும், மன்னனைப் பின்பற்றி தாமும் சமணத்தைச் சார்ந்தனர். நன்னெறி திரிந்து, நலம்குன்றும் நெறியில் நாட்டின் நடப்பு இருப்பதைக்கண்டு வேதனையுற்ற அரசியும் அமைச்சரும் திருமறைக்காட்டில் திருஞானசம்பந்தர் நிகழ்த்தி வந்த அற்புதமான சைவத்தொண்டைப் பற்றி கேள்வியுற்று மகிழ்ந்தார். அமைச்சரையும் கலந்தாலோசித்து, அறிஞர்கள் சிலரை அனுப்பி திருமறைக்காட்டுக்கு சென்று காழிப்பிள்ளையார் கழல் பணிந்து அவரை பாண்டி நாட்டுக்கு எழுந்தருளி சமண இருள் நீக்கும்படி வேண்டச்செய்தார். அவ்வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, திருஞான சம்பந்தர், திருமறைக்காட்டு ஈசன் மலரடி வணங்கி, உடன் இருந்த அப்பர் சுவாமிகளிடம் பாண்டி நாட்டின் நிலையையும், தாம் அங்கு செல்ல இருப்பதையும் கூற, ஒரு தந்தை தனது மகனுக்குக் காட்டும் பரிவுடன், அப்பர் சுவாமிகள் "பிள்ளாய். . . அமண் கையர் வஞ்சனைக்கோர் அவதியில்லை. . . உறுகோள் தானும் தீய" என்று சம்பந்தரிடம்

கூறினார். அதைக்கேட்ட புகலி வேந்தராகிய ஞானசம்பந்தர், "பரசுவது நம்பெருமான் கழல்கள் என்றால் பழுதுஅணையாது" எனப்பகர்ந்து பரமன் திருத்தாள் போற்றி அருளிச்செய்த திருப்பதிகம் இது.

உமையொரு பாகனை உள்ளத்தில் இருத்தி வழிபடுவோருக்கு, கோள் நாள் முதலியவற்றால் யாதொரு தீங்கும் அணுகா என்பதை

"... நல்ல நல்ல அவை நல்ல நல்ல

அடியாரவர்க்கு மிகவே"

என்று பாடல் தோறும் கூறுவது மட்டுமன்றி, "தானுரு கோளும் நாளும் அடியாரை வந்து நலியா. . . ஆணை நமதே" என்றும் சம்பந்தர் சூளுரைப்பது இப்பதிகத்தின் அளவிட முடியாத வலிமையை நமக்கு உணர்த்துகிறது. சைவ அன்பர்களுக்கு உறுதுணையான இவ்வுன்னத பதிகத்தை நாள்தோறும் ஒருமுறையேனும் ஓதுதல் நன்மை பயக்கும்.

திருச்சிற்றம்பலம்

பண் - பியந்தைக் காந்தாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழன்வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறுநல்லநல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே 1

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றோ டேழு பதினெட்டோ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 2

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்ததென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாதுபூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெதி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 3

மதிநுதல் மங்கையோடு வடபாலி ருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 4

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 5

வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 6

செப்பிள முலைநன் மங்கையொரு பாகமாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியும்அப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 7

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 8

பலபல வேடமாகும் பரன்நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனுமாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 9

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாகம் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரோ டமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில் கொளாலை விளைசெந்செல்துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே. 11

திருச்சிற்றம்பலம்

திருநீற்றுத் திருப்பதிகம்

திருநீற்றுப்பதிகம்

வளவர்கோன் பாவையின் வேண்டுகோளுக்கேற்ப, திருஆலவாய் எழுந்தருளிய சம்பந்தர், அமைச்சர் காட்டிய திருமடத்தில் தமது தொண்டர்களுடன் இரவு தங்கி, இறை சிந்தனையில் இன்புற்றிருந்தார். "வாதில் வெல்வதற்காக" என்று சம்பந்தரின் வருகையைப் பற்றிக் கேள்வியுற்ற சமணர்கள் அது பொறாதவர்களாக வஞ்சனை கூடிய மந்திரத்தால், பிள்ளையார் உறைவிடத்திற்கு தீ மூட்ட, அரசனிடம் அனுமதி பெற்றனர். சம்பந்தரின் வருகையால், சிந்தனையில் தடுமாற்றத்துடன் அரசன் இருப்பதைக்கண்ட அரசியார் அதுபற்றி வினவ, நிகழ்ந்ததை மன்னன் கூற பிள்ளையார் வாதில் வென்றால், அவர்பக்கம் சார்வதே நன்மை தரும் என்று அரசி பதிலளிக்க, அரசன் அதை ஏற்றுக் கொண்டான்.

இந்நிலையில், சமணர்கள், தொண்டர்களுடன் சம்பந்தர் தங்கியிருந்த திருமடத்திற்கு தம் மந்திரத்தால் தீ மூட்ட முயன்றனர். உள்ளிருப்பவர் "இடர் ஆன கெடுப்பது அஞ்செழுத்துமே" என்று பதிகம் பாடிய ஞானபோனகராயிற்றே! சமணர்கள் மந்திரம் அவரை என்ன செய்ய முடியும்? ஆதி மந்திரம் அஞ்செழுத்தோதுவார் நோக்கும் மாதிரத்தினும் மற்றை மந்திர விதி வருமே? என்று சேக்கிழார் பெருமானே அறுதியிட்டுக் கேட்டுக்கொள்கிறார். வரமுடியாது என்று உணர்த்தவும் செய்கிறார். அவ்வாறே தங்கள் மந்திரம் சிறிதும் பயனளிக்காததைக்கண்ட சமணர்கள், சம்பந்தரின் ஆற்றலை உணர்ந்து அஞ்சி, அருகில் இருந்த தழலைக் கொண்டு, திருமடத்திற்கு தீ மூட்டினர். அடியார்களுடன் இருக்கும் இடத்திற்கு, தீ மூட்டப்பட்டதைக் கண்ட காழிப் பிள்ளையார், அடியார்களுக்கு தீங்கிழைக்கப்படும் செயலினால் வெகுண்டு, இந்த இழிந்த செயலுக்குத் துணையாயிருந்த மன்னனைத் திருத்த, அத்தீயை "பையவே சென்று பாண்டியற்காகவே" என்று ஏவி பதிகம் பாடினார். விளைவாக, மடத்திற்கு சமணர்கள் மூட்டிய அத்தழல், பாண்டிய மன்னன் உடம்பில் வெப்பு நோயாகச் சென்றடைந்து வாட்டியது. மன்னனின் வேதனையை அறிந்த சமணர்கள் அவரது வெப்பு நோயை நீக்க, மன்னனை அணுகி மயிற்பீலியால் உடலைத்தடவி, தாங்கள் மந்திரங்களைக் கூற, நோய் நீங்குவதற்குப் பதிலாக, அவர்கள் மயிற்பீலி தான் வெந்து கருகிற்று.

வலி மிகுதியால் அவதியுற்ற மன்னனின் நிலையைக் கண்ட அரசியார், சம்பந்தரின் துணைக்கொண்டு துன்பத்தை நீக்கிக் கொள்ளலாம் என்று வேண்ட, அரசனும் சம்மதித்தான். மேலும், வெப்புப் பிணி நீக்குபவர் எவரேனும் அவர் புகட்டும் நெறியைப் பின்பற்றுவேன் என்று உறுதியளித்தான்.

இச்செய்தியை, குலச்சிறையார் மூலம் சம்பந்தருக்கு தெரியப்படுத்தி, அரசனின் துயர் நீக்கப்பெற அரசியார் விண்ணப்பித்தார். மகிழ்வுடன் அதை செயல்படுத்த சம்பந்தர் ஆலவாய் அண்ணலின் திருவடிகளுக்கு "வாதில் வென்றழிக்க" விண்ணப்பித்து மன்னரின் இருப்பிடத்தை அடைந்தார். அச்சத்துடன் சமணர்களும் அங்கு வந்து சேர்ந்தனர். பெருத்த அமணர்கள் கூட்டத்திற்கு முன் தனித்திருந்த பிள்ளையாரைக்கண்டு அரசியார் சிறிது பதைக்க ஆலவாய் அரன் நிற்க அமணர்களால் எனக்கு ஒன்றும் இடர் இல்லை என்று பிள்ளையார் பதிகம் அருளினார்.

இரு பக்கத்தோர் நிலையைக் கண்ட மன்னன், சமணரை நோக்கி என் வெப்பைத் தீர்த்து வாதில் வெல்க என்று கூற, சமணர்கள் மன்னனின் உடலின் இடப்பாகத்து வலியை தாம் நீக்குவதாக ஒப்புக் கொண்டு, தமது மந்திரங்களை எடுத்துரைத்து இடப்பாகம் மயிற்பீலி கொண்டு தடவினர். வலி குறைவதற்கு பதிலாக பன்மடங்கு பெருகியது.

வலி பொறாத மன்னன் சம்பந்தரை நோக்க, சம்பந்தரும் ஆலவாய் அன்னல் நீறே மன்னும் மந்திரமுமாகி மருந்துமாய்த் தீர்க்கும் என்று உரைப்புடன் பதிகம் அருளி, மன்னனின் வடபாகத்து உடலில் திருநீறை தடவ, அப்பகுதியிலிருந்த வெப்பு நோய் உடனே நீங்கி, உடல் குளிர்ந்தது. அப்போது அருளிய திருப்பதிகம் தான் திருநீற்றுப் பதிகம். பலன் கண்ட மன்னன், ஒரு பாகம் குளிர்ந்தும், தனது மறு பாகத்திலிருந்து வெம்மை கடுமையாகத் தாக்கவும், சம்பந்தரை வேண்ட, அவர் திருநீற்றை இடப்பாகத்திலும் தடவி, அப்பாகத்திலிருந்து வெப்பையும் அகற்றினார்.

இரண்டு மடங்கு வெற்றியை பிள்ளையாருக்கு பெற்றுத்தந்த ஆலவாய்க்குரிய இத்திருப்பதிகத்தைப் போற்றி, மனதைத் தேற்றி, திருநீற்றைச் சாற்ற எத்தகைய கொடிய துன்பம் விளைவிக்கும் நோயையும் நீக்கலாம் என்பது திண்ணம்.

திருச்சிற்றம்பலம்

பண் - காந்தாரம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே. 1

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே. 2

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே. 3

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே. 4

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே. 5

அருத்தம தாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே. 6

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் திருநீறே. 7

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆலவாயான் திருநீறே. 8

மாலொ டயன்அறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடிநீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் திருநீறே. 9

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆல வாயான் திருநீறே. 10

ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

மூன்றாம் திருமுறை

சமணத்தை முற்றும் தழுவியிருந்த பாண்டி நாட்டிற்கு எழுந்தருளி, அங்கிருந்த எண்ணிலாச் சமணர்களுக்கிடையில் அவர்களின் பொய்ந்நெறியில் கட்டுண்டிருந்த மீனவருக்கு உயிரை நல்கி, மெய்ந்நெறி கட்டி, மிக்க ஊனமாம் சமணை நீக்கி, உலகெலாம் உய்யக் கொண்ட ஞானசம்பந்தப் பெருமானைக் காணும் ஆவலுடன், அவரது தந்தையார் மதுரைக்கு வந்தார். திருஆலவாயில், பிள்ளையார் தங்கியிருந்த திருமடத்திற்கு வந்த அவரை எதிர்கொண்ட பிள்ளையார், தனது தந்தையாரைப் பார்த்தவுடன் தனக்கு சிவஞானம் புகட்டிய தோணிபுரத்து அம்மையப்பாரைப் பற்றிய நினைவுமிக, அவ்விறைவனின் பேரருளையும், பேரறத்தையும் போற்றி அருளிய திருப்பதிகம்.

திருமணம், மணிவிழா போன்ற சுபநிகழ்ச்சிகளில் வாழ்த்திடவும், நல்ல மங்களம் பெருக்கும் ஒலி அலைகள் பரவவும் துணைசெய்யும் பதிகம்

திருச்சிற்றம்பலம் பண் : கொல்லி

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே. 1

போதையார் பொற்கிண்ணத்து அடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுஉறத்தான்எனை ஆண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே 2

தொண்டனை செய்தொழில் துயர் அறுத்து உய்யலாம்
வண்டனை கொன்றையான் மதுமலர்ச் சடைமுடிக்
கண்துனை நெற்றியான்கழுமல வளநகர்ப்
பெண்துணையாக ஓர் பெருந்தகை இருந்ததே 3

அயர்வுளோம் என்றுநீ அசைவுஒழி நெஞ்சமே
நியர்வளை முன்கையாள் நேரிழை அவளொடுங்
கயல்வயல் குதிகொளுங் கழுமல வளநகர்ப்
பெயர்பல துதிசெயப் பெருந்தகை இருந்ததே 4

அடைவிலோம் என்றுநீ அயர்வுஒழி நெஞ்சமே
விடையமர் கொடியினான் விண்ணவர் தொழுதுஎழும்
கடைஉயர் மாடமார் கழுமல வளநகர்ப்
பெடைநடை அவளொடும் பெருந்தகை இருந்ததே 5

மற்றொரு பற்றிலை நெஞ்சமே மறைபல
கற்றநல் வேதியர் கழுமல வளநகர்ச்
சிற்றிடைப் பேரல்குல் திருந்திழை அவளொடும்
பெற்றுஎனை ஆளுடையப் பெருந்தகை இருந்ததே 6

குறைவளை வதுமொழி குறைவுஒழி நெஞ்சமே
நிறைவளை முன்கையாள் நேரிழை அவளொடும்
கறைவளர் பொழில்அணி கழுமல வளநகர்ப்
பிறைவளர் சடைமுடிப் பெருந்தகை இருந்ததே 7

அரக்கனார் அருவரை எடுத்தவன் அலறிட
நெருக்கினார் விரலினால் நீடியாழ் பாடவே
கருக்குவாள் அருள்செய்தான் கழுமல வளநகர்ப்
பெருக்குநீர் அவளொடும் பெருந்தகை இருந்ததே 8

நெடியவன் பிரமனும் நினைப்பரிதாய் அவர்
அடியொடு முடியறியா அழல் உருவினன்
கடிகமழ் பொழில்அணி கழுமல வளநகர்ப்
பிடிநடை அவளொடும் பெருந்தகை இருந்ததே 9

தாருறுதட்டுடைச் சமணர் சாக்கியர் கள்தம்
ஆருறு சொற்களைந்து அடியிணை அடைந்து உய்ம்மின்
காருறு பொழில்வளர் கழுமல வளநகர்ப்
பேரறத்தாளொடும் பெருந்தகை இருந்ததே 10

கருந்தடந் தேன்மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொங்கையோடு இருந்த எம்பிரான்தனை
அருந்தமிழ் ஞானசம்பந்தன செந்தமிழ்
விரும்புவார் அவர்கள் போய் விண்ணுலகு ஆள்வரே. 11

திருச்சிற்றம்பலம்

பஞ்சாக்கரத் திருப்பதிகம்

திருஞானசம்பந்தர், தமது நான்காவது திருப்பயணச் சுற்றில், சோழநாட்டிலும் நடுநாட்டிலும் உள்ள பல திருத்தலங்களை வழிபட்டு, திருக்கறிப்பறியலூர் வழிபாட்டுக்குப்பின் சீர்காழிக்குத் திரும்பி அங்கு சிலகாலம் தங்குகிறார். அவருக்கு ஏழு வயதாகிய அக்காலத்தில் அவரது பெற்றோர் உபநயனம் செய்ய விரும்பினர். மறை நான்கும் தந்தோம் என்று மந்திரங்கள் கூறி, அவருக்கு உபநயனச் சடங்கு செய்துவித்த மறையோர்களுக்கு, பிள்ளையாரும் எண்ணிறந்த புனித வேதம் பற்றி விளக்கம் அளித்தார்.

அருள் ஒளி நிறைந்த பிள்ளையாரிடம், தங்கள் ஐயங்களை கேட்டு தெளிவடைந்தனர் சடங்கு செய்வதற்காக அங்கு வந்திருந்த மறையவர்கள். அப்பொழுது "முந்தை முதன் மந்திரங்கள் தோன்றும் முதலாகும் முதல்வனார் எழுத்தஞ்சு" என்று கூறி, உபநயன சடங்கிற்கு உண்மைப் பொருள் கூறும் வகையில் "அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே" என்ற வரி கூடிய இந்த பஞ்சாக்கரப் பதிகத்தை அருளிச் செய்தார். இன்னல்களை நீக்கி, இறைவன் திருவடியை அடைய நமக்கு மிகச்சிறந்த துணையாகும் இந்தத் திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

பண் - காந்தார பஞ்சமம்

துஞ்சலும் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே. 1

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே. 2

ஊனில் உயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆன கெடுப்பன அஞ்செ ழுத்துமே. 3

நல்லவர் தீயர் எனாது நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ
கொல்ல நமன்றமர் கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செ ழுத்துமே. 4

கொங்கலர் மன்மதன் வாளி யைந்தகத்து
அங்குள பூதமும் அஞ்ச ஐம்பொழில்
தங்கர வின்படம் அஞ்சுந் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செ ழுத்துமே. 5

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை அஞ்செ ழுத்துமே. 6

வீடு பிறப்பை அறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாள்தொறும்
மாடு கொடுப்பன மன்னு மாநடம்
ஆடிஉ கப்பன அஞ்செ ழுத்துமே. 7

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டை .இராவணன் பாடி உய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்கு
அண்டம் அளிப்பன அஞ்செ ழுத்துமே. 8

கார்வணன் நான்முகன் காணுதற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாள்தொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வணம் ஆவன அஞ்செ ழுத்துமே. 9

புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்கு
அத்திரம் ஆவன அஞ்செ ழுத்துமே. 10

நற்றமிழ் ஞான சம்பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலையீ ரைந்தும் அஞ்செழுத்து
உற்றன வல்லவர் உம்ப ராவரே. 11

திருச்சிற்றம்பலம்

திருப்பாசுரம்

திரு ஆலவாய் வைகைக் கரையில் அருளியது

சுரவாதம், அனல்வாதம் இவை இரண்டிலுமே திருஞான சம்பந்தர் இருமடங்கு வெற்றிபெற, தோற்ற சமணர்கள், தங்களுக்கு மேலும் ஒரு வாய்ப்பு வேண்டும் என்று கேட்க, பிள்ளையார் ஒப்புக்கொண்டு என்னவாதம் செய்யலாம் என்று கேட்க, சமணர்கள் புனல்வாதத்திற்கு சம்பந்தரை அழைத்தனர். ஏட்டினில் எழுதி, ஆற்றில் ஓடும் நீரில் இட்டால், நீரில் அடித்துச் செல்லப்படாமல் நிலைக்கும் ஏடு வெற்றி பெற்றதாகக் கருதப்படும் என்பதே புனல்வாதம்.

முன்னிரண்டு வாதங்கள் போல் அல்லாது, இவ்வாதத்தில் தோற்பவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று வரையறுத்துக் கொள்ளவேண்டும் என்று கூறினார், திருத்தொண்டில் வழாத மன்னு மந்திரியாகிய குலச்சிறையார். சமணர்கள் தாமே முன்வந்து தோற்போமாகில் கழுவேறுவோம் என்று கூறினர்.

அனைவரும் வைகைக் கரையில் கூட, முதலில் சமணர்கள் அத்திநாத்தி என்னும் அவர்கள் மந்திரம் எழுதிய ஏட்டை ஆற்றிலிட, இட்டவுடனேயே நீரின் வேகத்தில் அவ்வேடு அடித்துச் செல்லப்பட்டது. அதைக் கண்ட மன்னன், சம்பந்தரை நோக்க, சம்பந்தர் தாமும் தென்னவன் மாறனின் முன்னை வல்வினையும் நீங்க, முதல்வனை அறியும் தன்மை துன்ன அருளியதே இத்திருப்பதிகம். சம்பந்தரே இதற்கு திருப்பாசுரம் என்ற பெயர் சூட்டியுள்ளார். பெரிய புராண நூலாசிரியராகிய சேக்கிழார் பெருமான், பன்னிரு திருப்பாடல்களுடைய இப்பாசுரத்திற்கு உரை ஆசிரியராகவும் ஆகி, இருபத்து பாடல்கள் அமைத்து விளக்கம் தருகிறார்.

இத்திருப்பாசுரம் எழுதிய ஏட்டை, பிள்ளையார் ஆற்றில் இட அது நீரை எதிர்த்து செல்லத் தொடங்கியது கண்டு அனைவரும் அதிசயித்தனர்.

வேந்தனும் ஓங்குக என்று கூறி, மன்னவனை கூன் நீக்கி நின்றசீர் நெடுமாறனாக்கியதும், ஆழ்க தீயது, எல்லாம் அரன் நாமமே சூழ்க என்று கூறுவதுமாகிய இத்திருப்பதிகம் நமக்கு அனைத்து வெற்றிகளையும் ஈட்ட உதவும் என்பதில் ஐயமில்லை.

திருச்சிற்றம்பலம்

பண் : கௌசிகம்

வாழ்க அந்தணர் வானவர் ஆன்இனம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதுஎல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே. 1

அரிய காட்சியராய் தமது அங்கைசேர்
எரியர் ஏறு உகந்து ஏறுவர் கண்டமும்
கரியர் காடு உறை வாழ்க்கையர் ஆயினும்
பெரியர் ஆர் அறிவார் அவர் பெற்றியே 2

வெந்தசாம்பல் விரை எனப் பூசியே
தந்தையாரொடு தாய் இலர் தம்மையே
சிந்தியா எழுவார் வினைதீர்ப்பரால்
எந்தையார் அவர் எவ்வகையார் கொலோ 3

ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகில் அளவு இல்லை கிளக்க வேண்டா
கோட்பாலனவும் வினையும் குறுகாமை எந்தை
தாள்பால் வணங்கித் தலைநின்று இவை கேட்க தக்கார் 4

ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டு உளன் எங்கள் சோதி
மா துக்கம் நீங்கல்உறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே 5

ஆடும் எனவும் அருங்கூற்றம் உதைத்து வேதம்
பாடும் எனவும் புகல் அல்லது பாவம் நீங்கக்
கேடும் பிறப்பும் அறுக்கும் எனக் கேட்டீர்ஆகில்
நாடும் திறத்தார்க்கு அருள் அல்லது நாட்டல் ஆமே. 6

கடி சேர்ந்த போது மலர் ஆன கைக் கொண்டு நல்ல
படி சேர்ந்த பால்கொண்டு அங்கு ஆட்டிடத் தாதை பண்டு
முடி சேர்ந்த காலை அற வெட்டிட முக்கண் மூர்த்தி
அடி சேர்ந்த வண்ணம் அறிவார் சொலக் கேட்டும் அன்றே 7

திருக்கச்சி ஏகம்பத்தில் அருளியது

திரு இருக்குக்குறள்

காஞ்சி மாநகருக்கு திருஞான சம்பந்தர் சென்ற பொழுது, பெருமகிழ்ச்சியுடன் வரவேற்ற மெய்த்தொண்டர்களுடன், திரு ஏகாம்பர நாதரை வணங்கி, அன்பர்கள் அமைத்துக் காட்டிய திருமடத்தில் இருந்தருளினார்.

பின் அறப்பெருஞ்செல்வமாகிய காமக்கோட்டத்தைப் பணிந்து, ஏகாம்பர நாதரை மறவாது வழிபட்ட நாட்களில் அருளிய பதிகங்களில் ஒன்று இத்திரு இருக்குக்குறள். வினை நீக்கம் பெற உதவும் குறிப்புடைய திருப்பதிகமாகும் இது.

திருச்சிற்றம்பலம்

பண் : கொல்லி

கரு ஆர் கச்சித், திரு ஏகம்பத்து
ஒருவா என்ன, மருவா வினையே. 1

மதி ஆர் கச்சி, திரு ஏகம்பத்து
விதியால் ஏத் தி ஆவாரே. 2

கலி ஆர்கச்சி மலி ஏகம்பம்
பலியால் போற்ற நலியா வினையே! 3

வரம் ஆர் கச்சிப்புரம் ஏகம்பம்
பரவா ஏத்த, விரவா வினையே 4

படம் ஆர் கச்சி, இடம் ஏகம்பத்து
உடையாய் என்ன, அடையா வினேயே. 5

நலம் ஆர் கச்சி, நிலவு ஏகம்பம்
குலவா ஏத்த, கலவா வினையே 6

கரியின் உரியின், திரு ஏகம்பன்
பெரிய புரம்மூன்று, எரிசெய்தானே 7

இலங்கை அரசைத், துலங்க ஊன்றும்
நலம் கொள் கம்பன், இலங்கு சரணே 8

மறையோன் அரியும், அறியா அனலன்
நெறி ஏகம்பம், குறியால் தொழுமே. 9

பறியாத் தேரர், நெறி இல் கச்சிச்
செறிகொள் கம்பம், குறுகுவோமே 10

கொச்சை வேந்தன் கச்சிக் கம்பம்
மெச்சும் சொல்லை, நச்சும் புகழே 11

நமச்சிவாயத் திருப்பதிகம்

சிவஞானம் பெற்ற திருஞானசம்பந்தர், தமக்கு உலகியலுக்குரிய திருமணம் வேண்டாம் என்று கூறிய போதும், சுற்றத்தார் வேண்டுகோளுக்கிணங்கி, நம் பாண்டார் நம்பி தம் திருமகளை மணம் செய்து கொள்ள இசைந்து திருப்பெருமண நல்லூருக்கு (ஆச்சாள்புரம்) எழுந்தருளுகிறார். திருமணத்திற்குரிய வைதீகச் சடங்குகளை திருநீல நக்கர் முன்னின்று நடத்த, மறையயொலி பொங்கி ஓங்க, மங்கல வாழ்த்து மல்க, நிறைவளை கைப்பற்றி, எரிவலம் கொள்ளும்கால், இல்லற இன்பம் கருதாது, "இவள் தன்னொடும் சிவன் தாள் சேர்வேன்" என்னும் விருப்புடன் திருப்பதிகம் மூலம் விண்ணப்பம் செய்ய, அவ்விருப்பிற்கிணங்கி, அருள்புரியும் வண்ணம் "நீயும் பூவை

அன்னாளும் இங்குன் புண்ணிய மணத்தில் வந்தார் யாவரும் என்பால் சோதி இதனுள் வந்து எய்தும்" என்று கூறி சிவலோகத் தியாகேசர், சோதியாய்க் காட்சி கொடுக்க, அப்பெருஞ் சோதியைக் கண்டின்புற்ற பிள்ளையார் "ஞான மெய்ந்நெறிதான் யார்க்கும் நமச்சிவாயச்சொலாம்" என்றும் "ஈனமாம் பிறவி தீர யாவரும் புகுக" என்றும் அறைகூவி அழைப்பு விடுத்து அருளிச்செய்த அற்புதப் பதிகம் இது.

திருமணத்தைக் காணவந்தோர், உடனிருந்த திருநீலநக்கர், திருமுருக நாயனார், பிள்ளையாரைப் பிரியாது தொண்டு செய்த சிவபாத இருதயர், நம்பாண்டார்நம்பி, சீர்ஆர்திருமெய் திருநீலகண்டயாழ்ப்பாணர் மற்றும் அவ்வேளையில் அங்கிருந்த அனைவரையும் ஒளிப்பிழம்பாகியிருந்த இறைவனுடன் கலக்க வைத்து, காதலியைக் கைப்பிடித்து தானும் பேரொளியுள் புகுந்து இறைவனுடன் இரண்டறக்கலந்தார்.

பிறவிப் பிணி நீங்கிப் பேரருள் பெற வழிகாட்டும் பதிகம் இது.

திருச்சிற்றம்பலம்

பண் - கௌசிகம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே. 1

நம்பு வாரவர் நாவி னவிற்றினால்
வம்பு நாள்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்உல குக்கெலாம்
நம்பன் நாமம் நமச்சிவாயவே. 2

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்தினைந்து
அக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவர்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்கன் நாமம் நமச்சிவாயவே. 3

இயமன் தூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயனன் நாமம் நமச்சிவாயவே. 4

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியல்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரால்
நல்லார் நாமம் நமச்சிவாயவே. 5

மந்த ரம்மன பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சிவாயவே. 6

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயி னுருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரதன் நாமம் நமச்சிவாயவே. 7

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கர னூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங் கொள் நாமம் நமச்சிவாயவே. 8

போதன் போதன கண்ணனு மண்ணல்தன்
பாதம் தான்முடி நேடிய பண்பராய்
யாதும் காண்பரி தாகி யலந்தவர்
ஓதும் நாமம் நமச்சிவாயவே. 9

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொன் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட வமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே. 10

நந்தி நாம நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யான்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாச மறுக்கவல் லார்களே. 11

திருச்சிற்றம்பலம்

நான்காம் திருமுறை

சூலைப்பிணி அகற்றிய கோதில் திருப்பதிகம்

அலகில் கலைத்துறை தழைப்ப, அருந்தவத்தோர் நெறிவாழ, உலகில் வரும் இருள்நீக்கி ஒளிவிளங்க திரு அவதாரம் செய்த திருநாவுக்கரசு பெருமான், தமது இளமைக்காலத்தில் சமணச்சார்புடையவராயிருந்ததைக் கண்டு அவரது தமக்கையான திலகவதியார் மிகவும் வேதனையுடன் வீரட்டானத்து ஈசரிடம் பலமுறையும் விண்ணப்பிக்க அதற்கு செவிசாய்த்த வீரட்ட நாதர், திருநாவுக்கரசருக்கு கொடிய சூலையைக் கொடுத்தார். சூலையின் கொடுமையைத் தாங்க முடியாத நாவுக்கரசருக்கு, அவர் சார்ந்திருந்த சமணப்பாசறையில் இருந்த பொய்நெறிச்சமணர்கள் பலவித முயற்சிகளைச் செய்தும், தங்களது மந்திர வித்தைகளைக்கையாண்டும் எவ்விதப் பயனும் இன்றி, சூலையின் கொடுமை அதிகரிக்க, நாவுக்கரசர் மிகுந்த வேதனையுடன் வாடினார். அவரது வேதனையைக்கண்டு, அதை நீக்க இயலாதவர்களாகிய சமணர்கள், சிறிதும் இரக்கமின்றி நாவுக்கரசரை தனியே வாட விட்டுச் சென்றுவிட்டனர். குண்டர்களாகிய சமணர்களும் கைவிட்டநிலையில், சூலைக்கொடுமையின் தாக்குதல் மேலும் அதிகரிக்க, அப்போது தான் அவருக்கு அவரது தமக்கையார் திலகவதியார் நினைவு வந்தது. ஏவலாளன் மூலம் தமக்கைக்குக் குறிப்பை அனுப்ப, திலகவதியார் நாவுக்கரசரை, சமணர்களின் கூடாரத்தை விட்டு வெளியேறித் தன்னிடம் வரச்சொல்லி செய்தி அனுப்பினார். அதை ஏற்றுக்கொண்ட நாவுக்கரசர், பொய்தருமால் உள்ளத்துப் புன்சமணர் இடம்கழிந்து, மெய்தருநெறி அடைய எண்ணி தமது தமக்கை இருக்கும் திருவதிகையை சென்று அதிகாலையில் சேர்ந்தார். தவம் மிகுந்த தமக்கையிடம், தனக்கு ஏற்பட்ட சூலையின் கொடுமையை விவரித்து, அவர் திருவடிகளை வணங்கினார். தம்மை வணங்கிய தம்பியாகிய நாவுக்கரசரை "கழலடைந்தோர் பற்றறுப்பார் தமைப் பணிந்து பணிசெய்வீர்" என்று ஆசீர்வதித்து, எழுச்செய்து, ஐந்தெழுத்தோதி திருநீறளித்தார். திருவாளன் திருநீறு திலகவதியார் அளிப்ப, பெருவாழ்வு பெற்ற உணர்வுடன், புறஇருள் நீங்கி பொழுது புலரும் வேளையில், தமது அகஇருள் நீங்கப் பெற்ற திருநாவுக்கரசர், தமக்கையாருடன் திருவதிகை வீரட்டானம் கோயிலுக்குச் சென்று, வலம் வந்து, தலமுறப் பணிந்து, நீற்றால் நிறைவாகிய மேனியுடன் மாற்றார் புரமெரித்த வீரட்டானத்து ஈசனிடம் விண்ணப்பித்த கோதில் திருப்பதிகம் தான் "கூற்றாயினவாறு விலக்ககிலீர்". அதுகாலும் அவரை வாட்டிய சூலைநோய், அத்திருப்பதிகத்தைப் பாடிய அக்கணமே, அவரை விட்டு நீங்கியது.

இற்றை நாட்களிலும், இத்திருப்பதிகத்தை முறையே ஓதுவதன் மூலம் வயிற்றுச் சார்புடைய எவ்வித நோய்களையும் நீக்கலாம் என்பது பலர் கூறும் அனுபவ வழி உண்மை.

திருச்சிற்றம்பலம்

பண் - கொல்லி

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நான் அறியேன்
ஏற்றாய்அடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன்அடி யேன் அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. 1

நெஞ்சம்உமக் கேயிட மாகவைத்தேன்
நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சம்இது வொப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகிவந் தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்தும்இடீர்
அஞ்சேலும் என்னீர் அதிகைக் கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 2

பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்
படுவெண்டலை யிற்பலி கொண்டுழல்வீர்
துணிந்தேஉமக் காட்செய்து வாழலுற்றால்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடி கொண்டுமெய் பூசவல்லீர்
பெற்றம்ஏற்றுகந் தீர்சுற்றும் வெண்டலைகொண்டு
அணிந்தீர்அடி கேள்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 3

முன்னம்அடி யேன்அறி யாமையினால்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னைஅடி யேன்உமக் காளும் பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னை அடைந்த தார்வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர் தங்கடன் ஆவதுதான்
அன்னநடை யார்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 4

காந்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்
கரைநின்றவர் கண்டுகொள் என்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்

வார்த்தையிது வொப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புனல் ஆர்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 5

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன் அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 6

உயர்ந்தேன்மனை வாழ்க்கையும் ஒண்பொருளும்
ஒருவர் தலைக் காவல் இலாமையினால்
வயந்தேஉமக் காட்செய்து வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்
பயந்தேயென் வயிற்றின் அகம்படியே
பறித்துப்புரட் டிஅறுத் தீர்த்திடநான்
அயர்ந்தேன்அடி யேன்அதி கைகெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 7

வலித்தேன்மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்
வஞ்சம்மனம் ஒன்றும் இலாமையினால்
சலித்தால்ஒரு வர்துணை யாருமில்லைச்
சங்கவெண்குழைக் காதுடை யெம்பெருமான்
கலித்தேயென் வயிற்றின் அகம்படியே
கலக்கிமலக்கிட்டுக் கவர்ந்துதின்ன
அலுத்தேன்அடியேன் அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 8

பொன்போல மிளிர்வதோர் மேனியினீர்
புரிபுன்சடை யீர்மெலி யும்பிறையீர்
துன்பேகவ லைபிணி யென்றிவற்றை
நணுகாமல் துரந்து கரந்தும்இடீர்
என்போலிகள் உம்மை யினித்தெளியார்
அடியார் படுவ திதுவேயாகில்
அன்பேஅமை யும்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 9

போர்த்தாயங்கோ ரானையின் ஈருரிதோல்
புறங்கா டரங்காநட மாடவல்லாய்

ஆர்த்தான்அரக் கன்றனை மால்வரைக்கீழ்
அடர்த்திட்டருள் செய்த அதுகருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என்வேதனை யான விலக்கியிடாய்
ஆர்த்தார்புனல் சூழ்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 10

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாயத் திருப்பதிகம்

சமணத்தை முன்பு சார்ந்திருந்த திருநாவுக்கரசர், அதிலிருந்து விடுபட்டு, தமக்கை திலகவதியார் காட்டிய வழியில் சைவத்தை தன்னெறியாக ஏற்றுக் கொண்டு, செந்தமிழ் சொல்வளப் பதிகத் தொடைபாடி, நாவுக்கரசு என்ற நாமம் ஏழ் உலகினும் நிலைபெறும் அளவு புகழ்பெற்றதைக் கண்டு பொறாத சமணர்கள் திருநாவுக்கரசரின் வளர்ச்சி சமணத்தின் அழிவுக்குக் காரணமாகும் என்று அஞ்சி மன்னனிடம் கலந்தாலோசித்தனர். அரசன் அனுமதியுடன் நாவுக்கரசரை நீற்றுறையில் இட்டும், கொடிய விடம் கொடுத்தும், கொல்களிறு ஏவியும் தீங்கிழைக்க முயன்றனர். “ஈண்டு வரும் வினைகளுக்கு எம்பிரான் உளன்” என்றும் “ஈண்டு வரும் துயருளவோ ஈசன் அடியார்க்கு?” என்றும் சிந்தை செய்து மன உறுதியுடன் இருந்த நாவுக்கரசரை துன்புறுத்த சமணர்கள் மேற்கொண்ட எந்த முயற்சியும் பலனளிக்காததால், ஏமாற்றத்தோடு கூடிய சீற்றத்துடன், நாவுக்கரசரை கல்லுடன் கட்டி நடுக்கடலில் விட்டனர். கல்லுடன் பிணைக்கப்பட்டு கடலில் விடப்பட்ட நிலையிலும் கலங்காத நாவுக்கரசர் “எப்பரிசாயினும் ஏத்துவன் எந்தையை” என்று ஐந்தெழுத்தை மனதில் எண்ணி அருளியதுதான் “சொற்றுணை வேதியன்” என்னும் தூயமொழி நற்றமிழ் மாலையாகிய நமச்சிவாயத் திருப்பதிகம்.

இத்திருப்பதிகத்தை பாடுதலும், கல்லுடன் கட்டப்பட்ட நிலையிலும், கடலில் மூழ்காமல், மிதந்து கரையேறினார்.

அடியார் இடுக்கண் தீர்க்கும் என்று அப்பர் சுவாமிகளே பலன்கூறிப் பாடிய அற்புதத் திருப்பதிகம் இது.

திருச்சிற்றம்பலம்

பண் - காந்தார பஞ்சமம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே. 1

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன் அஞ்சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கல நமச்சிவாயவே. 2

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சிவாயவே. 3

இடுக்கண்பட் டிருக்கினு மிரந்தி யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோ மல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளி னாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சிவாயவே. 4

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கல மருமறை யாறங்கம்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கல நமச்சிவாயவே. 5

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமில னாடொறு நல்கு வானலன்
குலமில ராகிலுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே. 6

வீடினா ருலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினா ரந்நெறி கூடச் சென்றலும்
ஓடினே னோடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினே னாடிற்று நமச்சிவாயவே. 7

இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே. 8

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அந்நெறி யேசென் றங் கடைந்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சிவாயவே. 9

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்து
ஏத்தவல் லார்தமக் குஇடுக்க ணில்லையே. 10

திருச்சிற்றம்பலம்

திருவாதிரைத் திருப்பதிகம்

திருப்புகலூர் எல்லையில், ஆண்ட அரசும், ஆளுடைய பிள்ளையாரும் சந்தித்த போது, திருவாரூரில் தாம் கண்டுகளித்த ஆதிரை திருவிழாச் சிறப்பை, திருநாவுக்கரசு சுவாமிகள், திருஞான சம்பந்த சுவாமிகளுக்கு எடுத்துரைத்த திருப்பதிகம்.

ஒரு ஆச்சாரியாரியரால் மற்றொரு ஆச்சாரியாரிடம் கூறப்பட்ட பெருமைக்குரியது இத்திருப்பதிகம்.

இன்றும், நாம் திருவிழாக்களில் காணும் அனைத்து கோலாகலங்களையும் அப்பர் சுவாமிகள் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கண்டு, அவற்றை இப்பதிகத்தில் அற்புதமாக சித்தரித்துள்ளார்

திருச்சிற்றம்பலம்

பண் : குறிஞ்சி

முத்து விதான மணிப்பொற் கவரி முறையாலே
பத்தர்க ளோடு பாவையர்சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்
அத்தன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம் 1

நணியார் சேயார் நல்லார் தீயார் நாடோறும்
பிணிதான் தீரும் என்று பிறங்கிக் கிடப்பாரும்
மணியே பொன்னே மைந்தா மணாளா என்பார்கட்(கு)
அணியான் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம் 2

வீதிகள் தோறும் வெண்கொடி யோடுவி தானங்கள்
சோதிகள் விட்டுச் சுடர்மா மணிகள் ஒளிதோன்றச்
சாதிக ளாய பவளமு முத்துத் தாமங்கள்
ஆதி ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம் 3

குணங்கள் பேசிக் கூடிப் பாடித் தொண்டர்கள்
பிணங்கித் தம்மிற் பித்தரைப் போலப் பிதற்றுவார்
வணங்கி நின்று வானவர் வந்து வைகலும்
அணங்கன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம் 4

நிலவெண் சங்கும் பறையும் ஆர்ப்ப நிற்கில்லாப்
பலரு மிட்ட கல்ல வடங்கள் பரந்தெங்கும்
கலவ மஞ்ஞை காரென் றெண்ணிக் களித்துவந்
தலம ராரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம் 5

விம்மா வெருவா விழியாத் தெழியா வெருட்டுவார்
தம்மாண் பிலராய்த் தரியார் தலையான் முட்டுவார்
எம்மான் ஈசன் எந்தை எனப்பன் என்பார்கட்(கு)
அம்மான் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம் 6

செந்துவர் வாயார் செல்வன சேவடி சிந்திப்பார்
மைந்தர்க ளோடு மங்கையர் கூடிம யங்குவார்
இந்திர னாதி வானவர் சித்தர் எடுத்தேத்தும்
அந்திரன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம் 7

முடிகள் வணங்கி மூவா தார்கண் முன்செல்ல
வடிகொள் வேய்த்தோள் வான்அர மங்கையர் பின்செல்லப்
பொடிகள் பூசிப் பாடுந் தொண்டர் புடைசூழ
அடிகள் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம் 8

துன்பம் நும்மைத் தொழாத நாள்கள் என்பாரும்
இன்பம் நும்மை யேத்து நாள்கள் என்பாரும்
நும்பின் எம்மை நுழையப் பணியே என்பாரும்
அன்பன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம் 9

பாரூர் பௌவத் தானைப் பத்தர் பணிந்தேத்தச்
சீரூர் பாடல் ஆடல் அறாத செம்மாப்பார்ந்(து)
ஓரூர் ஒழியா துலகம் எங்கும் எடுத்தேத்தும்
ஆரூ ரன்றன் ஆதிரை நாளால் அதுவண்ணம் 10

திருச்சிற்றம்பலம்

திருஅங்கமாலை

பெறற்கரிய மனிதப்பிறவியைப் பெற்றுள்ள நாம் அப்பிறவியின் பயனை முழுமையாக அடையவேண்டுமெனில் நம் உடல் உறுப்புகளை சிவச்சார்புடையதாக்க வேண்டும் என்று வற்புறுத்தி, தலைமுதல் கால் வரை உள்ள அனைத்து உறுப்புகளும் செய்யவேண்டியவற்றை வரையறுத்து இப்பதிகத்தில் அப்பர் சுவாமிகள் அருளியுள்ளார்.

திருக்கோயில் வலம் வரும்பொழுது ஓதுவதற்கு ஏற்ற பதிகம்.

திருச்சிற்றம்பலம்

பண் : சாதாரி

தலையே நீவணங்காய் -- தலை மாலை தலைக்கணிந்து,
தலையா லேபலி தேருந் தலாவனைத் தலையே நீவணங்காய் 1

கண்காள் காண்மின்களோ -- கடல் நஞ்சுண்ட கண்டன் தன்னை,
எண்டோள் வீசிநின் றாடும் பிரான் தன்னைக் கண்காள் காண்மின்களோ 2

செவிகாள் கேண்மின்களோ -- சிவன் எம்மிறை செம்பவள,
எரிபோல் மேனிப்பி ரான்திறம் எப்போதுஞ் செவிகாள் கேண்மின்களோ 3

மூக்கே நீமுரலாய் -- முது காடுறை முக்கணனை,
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை மூக்கே நீமுரலாய் 4

வாயே வாழ்த்துகண்டாய் -- மத யானை யுரிபோர்த்துப்,
பேய் வாழ்காட்டகத் தாடும்பிரான் தன்னை வாயே வாழ்த்துகண்டாய் 5

நெஞ்சே நீநினையாய் -- நிமிர் புன்சடை நின்மலனை,
மஞ்சாடும்மலை மங்கை மணாளனை நெஞ்சே நீநினையாய் 6

கைகாள் கூப்பித்தொழீர் -- கடிமாமலர் தூவிநின்று,
பை வாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக் கைகாள் கூப்பித்தொழீர் 7

ஆக்கையாற்பயனென் -- அரன்கோயில் வலம்வந்து,
பூக்கையால்அட்டிப் போற்றி யென்னாதஇவ் ஆக்கை யாற்பயனென் 8

கால்க ளாற்பயனென் -- கறைக் கண்ட னுறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ் சூழாக் கால்க ளாற்பயனென் 9

உற்றா ராருளரோ -- உயிர்கொண்டு போம்பொழுது,
உற்றாலத்துறை கூத்தனல் லால்நமக்கு உற்றார் ஆருளரோ 10

இறுமாந்து இருப்பன்கொலோ -- ஈசன்பல்கணத் தெண்ணப் பட்டுச்,
சிறுமான் ஏந்திதன் சேவடிக்கீழ்ச் சென்றங்கு இறுமாந் திருப்பன் கொலோ 11

தேடிக் கண்டுகொண்டேன் -- திரு மாலொடு நான்முகனும்,
தேடித்தே டொணாத் தேவனை என்னுளே தேடிக் கண்டு கொண்டேன் 12

ஐந்தாம் திருமுறை

திருக்குறுந்தொகை (திரு எறும்பியூர்)

சிலந்தியை அரசதாளச் செய்த ஆனைக்கா அண்ணலைப் பணிந்த நாவுக்கரசர், திரு எறும்பியூர் வந்து வழிபட்டார். அப்போது அவர் அருளிச் செய்தவை ஒரு திருக்குறுந்தொகையும், ஒரு திருத் தாண்டகமும். "எறும்பியூர் மலையான் எங்கள் ஈசனே" என்று உரிமை கொண்டாடி, எறும்பியூர் ஈசனைப் புகழ்ந்து, சிறப்பிக்கும் திருக்குறுந்தொகை இது.

திருச்சிற்றம்பலம்

விரும்பியூறு விடேல் மடநெஞ்சமே
கரும்பின் ஊறல் கண்டாய் கலந்தார்க்கு அவன்
இரும்பின் ஊறல் அறாததோர் வெண்தலை
எறும்பியூர் மலையான் எங்கள் ஈசனே 1

பிறங்கு செஞ்சடை பிஞ்ஞகன் பேணுசீர்க்
கறங்கு பூத கணமுடைக் கண்ணுதல்
நறுங்குழல் மடவாளொடு நாள்தொறும்
எறும்பியூர் மலையான் எங்கள் ஈசனே 2

மருந்து வானவர் தான் அவர்க்கு இன்சுவை
புரிந்த புன்சடைப் புண்ணியன் கண்ணுதல்
பொருந்துப் பூண்முலை மங்கை நல்லாளொடும்
எறும்பியூர் மலையான் எங்கள் ஈசனே 3

நறும்பொன் நாண்மலர் கொன்றையும் நாகமும்
துறும்பு செஞ்சடை தூமதி வைத்து வான்
உறும்பொன் மால்வரை பேதையோடு ஊர்தொறும்
எறும்பியூர் மலையான் எங்கள் ஈசனே 4

கறும்பியூர்வன ஐந்துள காயத்தில்
திறம்பியூர்வன மற்றும் பல உள
குறும்பி ஊர்வதோர் கூட்டகத்து இட்டெனை
எறும்பியூர் அரன் செய்த இயற்கையே 5

மறந்து மற்றிது பேரிடர் நாள்தொறும்
திறம்பி நீ நினையேல் மடநெஞ்சமே
புறம் செய் கோல குரம்பையில் இட்டு எனை
எறும்பியூர் அரன் செய்த இயற்கையே 6

இன்பமும் பிறப்பும் இறப்பினோடு
துன்பமும் உடனே வைத்த சோதியான்
அன்பனே அரனே என்று அரற்றுவார்க்கு
இன்பன் ஆகும் எறும்பியூர் ஈசனே 7

கண் நிறைந்த கனபவளத்திரள்
விண்ணிறைந்த விரிசுடர்ச்சோதியான்
உள் நிறைந்து உருவாய் உயிராய் அவன்
எண்ணிறைந்த எறும்பியூர் ஈசனே 9

நிறங்கொள் மால்வரை ஊன்றி எடுத்தலும்
நறுங்குழல் மடவாள் நடுக்கெய்திட
மறங்கொள் வாளரக்கன் வலி வாட்டினான்
எறும்பியூர் மலை எம் இறைகாண்மினே 10

திருச்சிற்றம்பலம்

திருக்குறுந்தொகை
(திருச்சிராப்பள்ளி)

திரு ஆனைக்கா, திரு எறும்பியூர் ஆகிய திருத்தலங்களை வழிபட்ட அப்பர் சுவாமிகள் மலர்ந்த சோதித் திருச்சிராப்பள்ளியை அடைந்து மட்டுவார் குழல் அம்மை உடனாகிய தாயுமான ஈசரை வழிபட்டு அருளியது இத்திருக்குறுந்தொகை நான்கே பாடல்கள் மட்டுமே கொண்டிருந்தபோதும், ஒவ்வொன்றும் பெருமானின் அளவிலாக் கருணையை எளிவந்த தன்மையையும் அற்புதமாக விளக்குகின்றன.

இப்பதிகத்தை முறையாக ஓதினால் பெருமான், தாயுமாக வந்து அருளுவார் என்பது அன்பர்கள் வெளிப்படுத்தும் அனுபவ உண்மை. "திருச்சிராப்பள்ளி என்றலும் தீவினை நரிச்சிராது நடக்கும் நடக்குமே" என்னும் வரி நினைவில் கொள்ளத்தக்கது.

திருச்சிற்றம்பலம்

மட்டுவார் குழலாளொடு மால்விடை
இட்ட மாவுகந்து ஏறும் இறைவனார்
கட்டு நீத்தவர்க் கின்னரு ளேசெயும்
சிட்டர் போலுஞ் சிராப்பள்ளிச் செல்வரே 1

அரிய யன் தலை வெட்டிவட் டாடினார்
அரிய யன்தொழு தேத்தும் அரும்பொருள்
பெரியவன்சிராப் பள்ளியைப் பேணுவார்
அரிய யன்தொழ அங்கிருப்பார்களே 2

அரிச்சி ராப்பகல் ஐவரால் ஆட்டுண்டு
சுரிச்சிராது நெஞ்சே ஒன்று சொல்லக்கேள்
திருச்சிராப்பள்ளி என்றலும் தீவினை
நரிச்சிராது நடக்கும் நடக்குமே 3

தாயுமாய் எனக்கே தலைக்கண்ணுமாய்
பேயனேனையும் ஆண்டபெருந்தகை
தேயநாதன் ராப்பள்ளி மேவிய
நாயனாரென நம்வினை நாசமே 4

திருச்சிற்றம்பலம்

ஆறாம் திருமுறை

போற்றித் திருத்தாண்டகம் (திருக்கயிலை)

செயற்கரிய கயிலை யாத்திரையை தம் முதிர்ந்த பருவத்தில் சிறிதும் மனம் தளராது அப்பர் சுவாமிகள் மேற்கொண்டார். உடல் உறுப்புக்கள் அனைத்தும் நலிவுற்ற பின்னும் உள்ளம் மேற்கொண்ட உறுதி சிறிதும் குறையாமல் "கயிலை கண்டல்லது மீளேன்" என்று சூளுரைத்த அப்பரின் உறுதியைக்கண்ட இறைவன், "இப்பொய்கையில் மூழ்கி பழுதில்சீர் ஐயாற்றில் காண்" என்று அருள் புரிந்தார்.

அந்நிலையில் பெருமானின் பேரருளை வியந்து, பணிந்து, "வேற்றாகி, விண்ணாகி" என்னும் இப்போற்றித் திருத்தாண்டகத்தை அருளி, ஐந்தெழுத்தோதி புனலில் மூழ்கினார்.

இமயச் சாரலில் உள்ள புனலில் மூழ்கிய அவர், திருவையாற்றில் உள்ள குளத்தில் எழுந்து அவர் காண விரும்பிய கயிலைக்காட்சியை, திரு ஐயாற்றில் கண்டார்.

இப்போற்றித் திருத்தாண்டகம் கூட்டு வழிபாட்டுக்கு மிகவும் உகந்ததாகும்.

திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 1

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாகம் அசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 2

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 3

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கு முடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 4

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வா ரொருவரையும் இல்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 5

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்ந்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 6

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ் சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 7

இமையா துயிரா யிருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாக மாகத் தணைத்தாய் போற்றி
ஊழி யேழான ஒருவா போற்றி
அமையா அருநஞ்ச மார்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 8

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 9

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகல முடையாய் போற்றி
அடியும் முடியு மிகலி போற்றி
அங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடிய வன்கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா என்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 10

உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணா ரிசையின்சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 11

போற்றித் திருத்தாண்டகம் (திரு ஆரூர்)

திருவாரூரில் திருநாவுக்கரசு பெருமான் எழுந்தருளியபோது அவரை எதிர்கொண்டு வரவேற்ற தொண்டர்களுடன் திருக்கோயிலுக்குச் சென்று முன்வாயிலை அடைந்து, தேவாசிரியனை வணங்கி, உயர்ந்த திருமாளிகையின் வாயில்களின் உட்புகுந்து, ஒளி பொருந்திய புற்றிடம் கொண்ட சிவ பெருமானை நேரே கண்டு கொண்டார்.

திருமூலட்டானனைக் கண்டு, தொழுது, விழுந்து, அங்கங்கள் மயிர்க்கூச்செரிய எழுந்து அன்புமேலீட்டால் கண்மாரி பொழிய, திருமூலட்டான ஈசன் திருவடித் தாமரைகளை போற்றி அருளியதே இப்போற்றித் திருத்தாண்டகம்.

இப்போற்றித் திருத்தாண்டகம் சிவஅர்ச்சனைக்கு மிகவும் ஏற்றதாகும்.

திருச்சிற்றம்பலம்

கற்றவர்க ளுண்ணுங் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி
அற்றவர்கட் காரமுதமானாய் போற்றி
அல்லலறுத் தடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவ ரொப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 1

வங்கமலி கடல்நஞ்ச முண்டாய் போற்றி
மதயானையீரு ரிவை போர்த்தாய் போற்றி
கொங்கலரும் நறுங் கொன்றைத் தாராய் போற்றி
கொல்புலித்தோ லாடைக் குழகா போற்றி
அங்கணனே அமரர்கள்தம் இறைவா போற்றி
ஆலமர நீழலறஞ் சொன்னாய் போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 2

மலையான் மடந்தை மணாளா போற்றி
மழவிடையாய் நின்பாதம் போற்றி போற்றி
நிலையாக என்னெஞ்சில் நின்றாய் போற்றி
நெற்றிமே லொற்றைக்கண் ணுடையாய் போற்றி
இலையார்ந்த மூவிலைவே லேந்தீ போற்றி
ஏழ்கடலு மேழ்பொழிலு மானாய் போற்றி
சிலையாலன் றெயி லெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 3

பொன்னியலும் மேனியனே போற்றி போற்றி
பூதப் படையுடையாய் போற்றி போற்றி
மன்னியசீர் மறைநான்கு மானாய் போற்றி
மறியேந்து கையானே போற்றி போற்றி
உன்னுமவர்க் குண்மையனே போற்றி போற்றி
உலகுக் கொருவனே போற்றி போற்றி
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 4

நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனேநின் பாதம் போற்றி போற்றி
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி
வெண்மதியங் கண்ணி விகிர்தா போற்றி
துஞ்சிருளி லாட லுகந்தாய் போற்றி
தூநீறு மெய்க்கனிந்த சோதீபோற்றி
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 5

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி

அங்கமலத் தயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 6

வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி
வான் பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி
கொம்பனைய நுண்ணியடையாள் கூறா போற்றி
குரைகழலாற் கூற்றுதைத்த கோவே போற்றி
நம்புவர்க் கரும்பொருளே போற்றி போற்றி
நால்வேதம் ஆறங்க மானாய் போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 7

உள்ளமா யுள்ளத்தே நின்றாய் போற்றி
உகப்பார் மனத்தென்றும் நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர்கோன் தோள் துணித்த மைந்தா போற்றி
வெள்ளையேறேறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கு மேலோர்க்கும் மேலாய் போற்றி
தெள்ளுநீர்க் கங்கைச் சடையாய் போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 8

பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர்போற்றும் பொருளே போற்றி
தேவார்ந்த தேவர்க்குந் தேவே போற்றி
திருமாலுக் காழி யளித்தாய் போற்றி
சாவாமே காத்தென்னை யாண்டாய் போற்றி
சங்கொத்த நீற்றெஞ் சதுரா போற்றி
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 9

பிரமன்தன் சிரமரிந்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோ டாணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கும் முக்கண்ணும் உடையாய் போற்றி
காதலிப்பார்க் காற்ற எளியாய் போற்றி
அருமந்த தேவர்க் கரசே போற்றி
அன்றரக்கன் ஐந்நான்கு தோளுஞ் தாளுஞ்
சிரம் நெறித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 10

திருச்சிற்றம்பலம்

நின்ற திருத்தாண்டகம்

உருத்திரத்திற்கு இணையாக பேசப்படும் பதிகம், எங்கெங்கும் இறைவனையே காண்கின்ற தாகும். உயிர்ப்பொருள், உயிரில் பொருள் என நீக்கமற நிற்கும் இறைவனது தன்மைகளை அழகுறத் தொகுத்து, அருந்தவ வேந்தராகிய அப்பர் சுவாமிகள் நமக்கருளியது இந்த ஒப்பற்ற திருப்பதிகமாகும்.

திருச்சிற்றம்பலம்

இருநிலனாய் தீயாகி நீருமாகி
இயமானனாய் எறியும் காற்றுமாகி
அருநிலைய திங்களாகி ஞாயிறாகி
ஆகாசமாய் அட்ட மூர்த்தியாகி
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறர் உருவும் தம் உருவும் தாமேயாகி
நெருநலையாய் இன்றாகி நாளையாகி
நிமர்புன் சடையடிகள் நின்றவாறே 1

மண்ணாகி விண்ணாகி மலையு மாகி
வயிரமுமாய் மாணிக்கந் தானே யாகிக்
கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியுமாகிக்
கலையாகிக் கலைஞானந்தானே யாகிப்
பெண்ணாகிப் பெண்ணுக்கோர் ஆணுமாகிப்
பிரளயத்துக்கப்பால் ஓர் அண்டமாகி
எண்ணாகி எண்ணுக்கோர் எழுத்துமாகி
எழும் சுடராய் எம் அடிகள் நின்றவாறே 2

கல்லாகிக் களறாகிக் கானு மாகிக்
காவிரியாய் கால் ஆறாய்க் கழியுமாகிப்
புல்லாகிப் புதலாகிப் பூடுமாகிப்
புரமாகிப் புரமூன்றும் கெடுத்தா னாகிச்
சொல்லாகிச் சொல்லுக்கோர் பொருளுமாகி
சுலாவாகிச் சுலாவுக்கோர் சூழலாகி
நெல்லாகி நிலனாகி நீருமாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள் நின்றவாறே 3

காற்றாகிக் கார்முகிலாய்க் காலம் மூன்றாய்க்
கனவாகி நனவாகிக் கங்கு லாகிக்
கூற்றாகிக் கூற்றுதைத்த கொல்களிறு மாகிக்
குரைகடலாய்க் குரை கடற்கோர் கோமானுமாய்

நீற்றானாய் நீறேற்ற மேனியாகி
நீள்விசும்பாய் நீள்விசும்பின் உச்சியாகி
ஏற்றானாய் ஏறூர்ந்த செல்வனாகி
யெழுஞ்சுடராய் எம் அடிகள் நின்றவாறே 4

தீயாகி நீராகித் திண்மை யாகித்
திசையாகி அத்திசைக்கோர் தெய்வமாகித்
தாயாகித் தந்தையாய்ச் சார்வு மாகித்
தாரகையும் ஞாயிறும் தண்மதியு மாகிக்
காயாகிப் பழமாகிப் பழத்தில் நின்ற
இரதங்கள் நுகர்வானுந் தானேயாகி
நீயாகி நானாகி நேர்மையாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள் நின்றவாறே 5

அங்கமாய் ஆதியாய் வேதமாகி
அருமறையோடு ஐம்பூதந் தானேயாகிப்
பங்கமாய்ப் பல சொல்லுந்தானே யாகிப்
பால்மதியோ டாதியாய்ப் பான்மையாகிக்
கங்கையாய்க் காவிரியாய்க் கன்னியாகிக்
கடலாகி மலையாகி கழியுமாகி
எங்குமாய் ஏறூர்ந்த செல்வனாகி
எழுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள் நின்றவாறே 6

மாதா பிதாவாகி மக்களாகி
மறிகடலும் மால்விசும்புந் தானே யாகிக்
கோதா விரியாய்க் குமரி யாகிக்
கொல்புலித் தோல் ஆடைக்குழ னாகிப்
போதாய மலர்கொண்டு போற்றி நின்று
புனைவார் பிறப்பறுக்கும் புனித னாகி
யாதானும் என நினைந்தார்க்கு எளிதே யாகி
அழல் வண்ண வண்ணர்தாம் நின்றவாறே 7

ஆவாகி ஆவினில் ஐந்தும் மாகி
அறிவாகி அழலாகி ஆவியுமாகி
நாவாகி நாவுக்கோர் உரையுமாகி
நாதனாய் வேதத்தினுள்ளோ னாகிப்
பூவாகி பூவுக்கோர் நாற்றமாகி
புக்குளால் வாசமாய் நின்றா னாகித்
தேவாகித் தேவர் முதலுமாகிச்
செழுஞ்சுடராய்ச் சென்றடிகள் நின்றவாறே 8

நீராகி நீள் அகலம் தானேயாகி
நிழலாகி நீள்விசும்பின் உச்சியாகிப்
பேராகிப் பேருக்கோர் பெருமையாகிப்
பெருமதில்கள் மூன்றினையும் எய்தானாகி
ஆரேனுந் தன்னடைந்தோர் தம்மையெல்லாம்
ஆட்கொள்ள வல்லஎம் ஈசனார் தாம்
பாராகிப் பண்ணாகிப் பாடலாகிப்
பரஞ்சுடராய்ச் சென்றடிகள் நின்றவாறே 9

மாலாகி நான்முகனாய் மாபூதமாய்
மருக்கமாய் அருக்கமாய் மகிழ்வுமாகிப்
பாலாகி எண்டிசைக்கும் எல்லையாகிப்
பரப்பாகிப் பரலோகந்தானே யாகிப்
பூலோக புவலோக சுவலோகமாய்ப்
பூதங்களாய் புராணன் தானேயாகி
ஏலாதன வெல்லாம் ஏல்விப் பானாய்
எழுஞ்சுடராய் எம் அடிகள் நின்றவாறே. 10

திருச்சிற்றம்பலம்

ஏழாம் திருமுறை

தடுத்தாட்கொண்டமை

நம்பி ஆரூரர் மணக்கோலம் பூண்டு மணப்பந்தலில் வீற்றிருந்த பொழுது, சிவபெருமான் முன்பு கயிலையில் அவருக்கு வாக்களித்த வண்ணம் தடுத்தாட்கொள்வதற்காக வேதியர் வடிவு கொண்டு அவையில் தோன்றி "இவன் நமக்கு வழி வழி அடிமை" என்று ஒலையின் துணைகொண்டு அவையோர்க்கு எடுத்துரைத்தார். வெகுண்ட சுந்தரர் வேதியரைப்பார்த்து "நீ பித்தரோ" என்று வினவ, மனம் தளராத வேதியர் தகுந்த விளக்கத்துடன் மணக்கோலம் பூண்ட சுந்தரர் அவர்க்கு அடிமை என்று நிரூபித்தார். சுந்தரர் "அவர் யார்" என வினவ, திருவெண்ணெய் நல்லூர் திருக்கோயில் வரை உடன் அழைத்துச் சென்று, கோயிலினுள் சென்று மறைந்தார்.

உடன் வந்த வேதியர் இறைவனே என்று உணர்ந்த சுந்தரர் தாய்ப்பசுவின் கனைப்பைக் கேட்ட கன்று போல் கதறி "அடியேனைத் தடுத்தாட்கொண்ட பேரருளை என்னென்பேன்" என்று கூறித் துதிக்க, சிவபெருமானும் ஆரூரரை நோக்கி "சிறப்பின் மிக்க அர்ச்சனைப் பாட்டே ஆகும், சொற்றமிழ்ப் பாடுக" என்று கூறினார்.

“என்சொல்லிப் பாடுகேன்” என்று சுந்தரர் மீண்டும் கேட்க “முன்பெனைப் பித்தனென்றே மொழிந்தனை ஆதலாலே என்பெயர் பித்தனென்றே பாடுவாய்” என்று இறைவன் கூற, நம்பி ஆரூரர் ஆகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது தான் “பித்தா பிறை சூடி” என்னும் பெரிதாம் திருப்பதிகமாகும்.

திருச்சிற்றம்பலம்

பண் - இந்தளம்

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணை நல்லூரருட்டுறையுள்
அத்தாஉனக் காளாய்இனி அல்லேனென லாமே. 1

நாயேன்பல நாளும்நினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள்பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால் வெண்ணை நல்லூரருட்டுறையுள்
ஆயாஉனக் காளாய் இனி அல்லேனென லாமே. 2

மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி
மின்னார் பெண்ணைத் தென்பால் வெண்ணை நல்லூரருட்டுறையுள்
அன்னேஉனக் காளாய் இனி அல்லேனென லாமே. 3

முடியேன்இனிப் பிறவேன்பெறின் மூவேன்பெற்றம் ஊர்தி
கொடியேன்பல பொய்யேஉரைப் பேனைக்குறிக் கொள்நீ
செடியார் பெண்ணைத் தென்பால் வெண்ணை நல்லூரருட்டுறையுள்
அடிகேள்உனக் காளாய் இனி அல்லேனென லாமே. 4

பாதம்பணி வார்கள்பெறு பண்டம்மது பணியாய்
ஆதன்பொரு ளானேன்அறி வில்லேன்அரு ளாளா
தாதார் பெண்ணைத் தென்பால் வெண்ணை நல்லூரருட்டுறையுள்
ஆதீஉனக் காளாய் இனி அல்லேனென லாமே. 5

தண்ணார்மதி சூடீதழல் போலுந்திரு மேனீ
எண்ணார்புர மூன்றும்எரி யுண்ணநகை செய்தாய்
மண்ணார் பெண்ணைத் தென்பால் வெண்ணை நல்லூரருட்டுறையுள்
அண்ணாஉனக் காளாய் இனி அல்லேனென லாமே. 6

ஊனாய்உயிரானாய்உடலானாய்உலகானாய்
வானாய்நில னானாய்கட லானாய் மலையானாய்
தேனார் பெண்ணைத் தென்பால் வெண்ணை நல்லூரருட்டுறையுள்
ஆனாய்உனக் காளாய் இனி அல்லேனென லாமே. 7

ஏற்றார்புரம் மூன்றும்மெரி யுண்ணச்சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரி வேனோசெக்கர் வான்நீர்
ஏற்றாய் பெண்ணைத் தென்பால் வெண்ணை நல்லூரருட்டுறையுள்
ஆற்றாய்உனக் காளாய் இனி அல்லேனென லாமே. 8

மழுவாள்வலன் ஏந்தீமறை யோதீமங்கை பங்கா
தொழுவாரவர் துயராயின தீர்த்தல்லுன தொழிலே
செழுவார் பெண்ணைத் தென்பால் வெண்ணை நல்லூரருட்டுறையுள்
அழகாஉனக் காளாய் இனி அல்லேனென லாமே. 9

காரூர்புன லெய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர்புக ழெய்தித்திகழ் பன்மாமணி யுந்திச்
சீரூர் பெண்ணைத் தென்பால் வெண்ணை நல்லூரருட்டுறையுள்
ஆரூரன்எம் பெருமாற்காள் அல்லேனென லாமே. 10

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாயத் திருப்பதிகம்

சோழ நாட்டில் உள்ள திருஆனைக்கா, திருப்பைஞ்ஞீலி, திருப்பாச்சிலாச்சிராமம், திருஈங்கோய்மலை முதலிய பல திருப்பதிகளை வணங்கிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பாண்டிக் கொடுமுடியை அணைந்து, அன்பினில் தாழ்ந்து வேட்கை பொங்க புனிதர் பொன்மேனியை நோக்கி அவரை மறக்க வொண்ணாத எழுச்சியினால் "அண்ணலார் அடிகள் மறக்கினும் நாம அஞ்செழுத்து அறிய, எப்பொழுதும் எண்ணிய நாவே இன்சுவைபெறுக இடையறாது இயம்பும்" என்னும் பொருள்பட நண்ணிய அன்பில் நவின்றார் இந்த நமச்சிவாயத் திருப்பதிகத்தை.

"உலகெலாம் உய்ய உறுதியாம் திருப்பதிகம்" என்று இப்பதிகத்தை சேக்கிழார் பெருமான் சிறப்பிப்பார்.

திருச்சிற்றம்பலம்

பண் : பழம்பஞ்சுரம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே 1

இட்ட னும்அடி ஏத்து வார்இகழ்ந்
திட்ட நாள்மறந் திட்டநாள்
கெட்ட நாள்இவை என்ற லாற்கரு
தேன்கி ளர்புனற் காவிரி
வட்ட வாசிகை கொண்ட டிதொழு
தேத்து பாண்டிக் கொடுமுடி
நட்ட வாஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே 2

ஓவுநாள்உணர் வழியும்நாள் உயிர்
போகும் நாள்உயர் பாடைமேல்
காவுநாள் இவைஎன்ற லாற்கரு
தேன்கி ளர்புனற் காவிரிப்
பாவு தண்புனல் வந்தி ழிபரஞ்
சோதி பாண்டிக் கொடுமுடி
நாவ லாஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே 3

எல்லை யில்புகழ் எம்பிரான் எந்தை
தம்பி ரான்என்பொன் மாமணி
கல்லை யுந்தி வளம்பொ ழிந்திழி
காவி ரியதன் வாய்க்கரை
நல்ல வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
வல்ல வாஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே 4

அஞ்சி னார்க்கர ணாதி என்றடி
யேனும் நான்மிக அஞ்சினேன்
அஞ்ச லென்றடித் தொண்ட னேற்கருள்
நல்கி னாய்க்கழி கின்றதென்
பஞ்சின் மெல்லடிப் பாவை மார்குடைந்
தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்ச ணிகண்ட நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே 5

ஏடு வான்இளந் திங்கள் சூடினை
என்பின் கொல்புலித் தோலின்மேல்
ஆடு பாம்ப தரைக்க சைத்த
அழக னேஅந்தண் காவிரிப்

பாடு தண்புனல் வந்தி ழிபரஞ்
சோதி பாண்டிக் கொடுமுடிச்
சேட னேஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே 6

விரும்பி நின்மலர்ப் பாத மேநினைந்
தேன்வி னைகளும் விண்டனன்
நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெ ழில்பெற
நின்ற காவிரிக் கோட்டிடைக்
குரும்பை மென்முலைக் கோதை மார்குடைந்
தாடு பாண்டிக் கொடுமுடி
விரும்ப னேஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே 7

செம்பொ னேர்சடை யாய்தி ரிபுரந்
தீயெ ழச்சிலை கோலினாய்
வம்பு லாங்குழ லாளைப் பாகம்
அமர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின் மேற்குயில் கூவமாமயில்
ஆடு பாண்டிக் கொடுமுடி
நம்ப னேஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே 8

சார ணன்தந்தை எம்பி ரான்எந்தை
தம்பி ரான்என் பொன் மாமணி யென்று
பேரெ ணாயிர கோடிதேவர்
பிதற்றி நின்று பிரிகிலார்
நார ணன்பிர மன்தொ ழுங்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடிக்
கார ணாஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே 9

கோணி யபிறை சூடி யைக்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
பேணி யபெரு மானைப் பிஞ்ஞகப்
பித்த னைப்பிறப் பில்லியைப்
பாணு லாவரி வண்ட றைகொன்றைத்
தார னைப்படப் பாம்பரை
நாண னைத் தொண்டன் ஊரன் சொல்லிவை
சொல்லு வார்க்கில்லை துன்பமே. 10

திருச்சிற்றம்பலம்

திருத்தொண்டத்தொகை

திருவாரூரில் பரவையாரை மணம் புணர்ந்து மகிழ்வுடன் இறைவனுக்கு பாமாலைகளைச் சாற்றி வாழ்ந்துவரும் நாட்களில் ஒருநாள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் பூங்கோயிலை அடைந்து, தேவாசிரிய மண்டபத்தில் எண்ணிலாத சிவனடியார்கள் இருக்கக்கண்டு "இவர்களுக்கு நான் அடியன் ஆகும் நாள் எந்நாள்" என்ற ஏக்கத்துடன் திருக்கோயிலின் வாயிலின் முன்பணிந்து உள்ளே புகுந்தார். அவரது எண்ணத்தை நிறைவேற்றும் வண்ணம் இறைவனும் எதிரிலே காட்சி கொடுத்து அடியார்களின் தொண்டின் பெருமையை சுந்தரருக்கு எடுத்துக்கூறி அவர்களைப் போற்றிப் பாடும்படி சுந்தரருக்கு ஆணையிட்டார். "அடியார்களை நான் எவ்வாறு பாடுவேன்" என்று சுந்தரர் வேண்ட இறைவனே தன் திருவாக்கால் "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடியெடுத்துக் கொடுத்து "இசைப்பா மொழி" என்று கூறி மறைந்தார்.

அந்த அடியே முதலாகக் கொண்டு, வன்தொண்டராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியதே திருத்தொண்டத் தொகையாகும்.

ஒவ்வொரு அடியாரையும் தனித்தே வணங்கி, புகழ்ந்தும், அடியார்களின் தன்மைகளை தொகையாகவும் தொகுத்தும் புகழ்ந்து, அவருக்கு பிற்காலத்திலும் வரும் அடியார்களையும் மனத்தில் கொண்டு நம்பி ஆரூரர் இப்பதிகத்தை அருமையாக அருளியுள்ளார்.

இதுவே பெரிய புராணத்திற்கு மூலமாக அமைந்தது.

அடியார் வழிபாடு இல்லாத அரன் வழிபாடு முழுமை அடையாது என்பதையும் அடியார் புகழ் அரன் புகழைவிட மிகவும் பெரியது என்பதையும் தன்னைப் புகழ்வதற்கு பித்தா என்ற ஒரு சொல்லை எடுத்துக்கொடுத்த சிவபெருமான் அடியாரைப் புகழ சுந்தரருக்கு ஒரு முழு அடியை எடுத்துக் கொடுத்ததன் மூலம் நாம் உணர வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

பண் - கொல்லிக் கௌவாணம்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே 1

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தற் கடியேன்
ஏனாதி நாதன்றன்அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
கடவூரிற் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயற் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே 2

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே 3

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கு மடியேன்
பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியேன்
அருநம்பி நமிநந்தி யடியார்க்கு மடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே 4

வம்பறா வரிவண்டு மணநாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கற்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே 5

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற் கடியேன்

கார்கொண்ட கொடைகழறிற் றறிவாற்கும் அடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே 6

பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் அடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச் சோழற் கடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தற் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே 7

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புள்ள நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைகொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவாற் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே 8

கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே 9

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே 10

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய்உலகாண்ட செங்கணாற் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்
ஆரூரில் அம்மானுக் கன்பரா வாரே 11

திருச்சிற்றம்பலம்

திருவடமுல்லைவாயில்

தாம் செய்த சபதவழி நில்லாது, ஒற்றியூரை விட்டு நீங்கியதால் நம்பிகள் கண்கள் இரண்டையும் இழந்தார். அந்த நிலையில் அவர் ஆரூரை நோக்கி செல்லும்பொழுது இடையிலுள்ள பல தலங்களை வணங்கினார் அதில் முதல் தலம் வடதிருமுல்லை வாயிலாகும்.

பெருமானின் அருள் திறத்தை பல்வாறு பாடல்கள் தோறும் புகழ்ந்து, தாம் உற்ற படுதுயர் நீக்கும்படி சுந்தரமூர்த்தி சுவாமிகள் விண்ணப்பித்தது இத்திருப்பதிகமாகும். நெஞ்சை மிகவும் உருக்கும் இப்பதிகத்தை ஓத அடியார்களுக்கு ஏற்படும் அனைத்துத் துன்பங்களும் கதிரவனைக் கண்ட பனி போல் நீங்கும் என்பது சத்தியம்.

திருச்சிற்றம்பலம்

பண் : தக்கேசி

திருவும்மெய்ப் பொருளும் செல்வமும் எனக்குன் சீருடைக் கழல்களென் றெண்ணி,
ஒருவரை மதியா(து)உறாமை கள்செய்தும் ஊடியும் உறைப்பனாய்த் திரிவேன்,
முருகமர் சோலை சூழ்திரு முல்லை வாயிலாய் வாயினா லுன்னைப்,
பரவிடும் அடியேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே 1

கூடிய இலயஞ் சதிபிழை யாமைக் கொடியிடை உமையவள் காண,
ஆடிய அழகா அருமறைப் பொருளே அங்கணா எங்குற் றாயென்று,
தேடிய வானோர் சேர்திரு முல்லை வாயிலாய் திருப்புகழ் விருப்பால்,
பாடிய அடியேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே 2

விண்பணிந் தேத்தும் வேதியா மாதர் வெருவிட வேழம் அன் றுரித்தாய்,
செண்பகச் சோலை சூழ்திரு முல்லை வாயிலாய் தேவர்தம் அரசே,
தண்பொழில் ஒற்றி மாநக ருடையாய் சங்கிலிக் காஎன் கண்கொண்ட,
பண்பநின் அடியேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ்சுடரே 3

பொன்னலங் கழனிப் புதுவிரை மருவிப் பொறிவரி வண்டிசை பாட,
அந்நலங் கமலத் தவிசின்மேல் உறங்கும் அலவன்வந் துலவிட வள்ளல்
செந்நெலங் கழனி சூழ்திரு முல்லை வாயிலாய் திருப்புகழ் விருப்பால்,
பன்னலந் தமிழாற் பாடுவேற் கருளாய் பாசுப தாபரஞ்சுடரே 4

சந்தன வேருங் காரகிற் குறடுந் தண்மயிற் பீலியுங் கரியின்,
தந்தமுந் தாளக் குவைகளும் பவளக் கொடிகளுஞ் சுமந்துகொண் டுந்தி,
வந்திழி பாலி வடகரை முல்லை வாயிலாய் மாசிலா மணியே,
பந்தனைகெடுத்தென் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ்சுடரே 5

மற்றுநான் பெற்ற தார்பெற வல்லார் வள்ளலே கள்ளமே பேசிக்,
குற்றமே செயினுங் குணமெனக் கொள்ளுங் கொள்கையால் மிகைபல செய்தேன்,
செற்றுமீ தோடுந் திரிபுர மெரித்த திருமுல்லை வாயிலாய் அடியேன்,
பற்றிலேன் உற்ற படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. 6

மணிகெழு செவ்வாய் வெண்ணகைக் கரிய வார்குழல் மாமயிற் சாயல்,
அணிகெழு கொங்கை அங்கயற் கண்ணார் அருநடம் ஆடல் அறாத,
திணிபொழில் தழுவு திருமுல்லை வாயிற் செல்வனே எல்லியும் பகலும்,
பணியது செய்வேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. 7

நம்பனே அன்று வெண்ணெய்நல் லூரில் நாயினேன் தன்னைஆட் கொண்ட,
சம்புவே உம்ப ரார்தொழு தேத்துந் தடங்கடல் நஞ்சுண்ட கண்டா,
செம்பொன்மாளிகைசூழ் திருமுல்லை வாயில் தேடியான் திரிதர்வேன் கண்ட,
பைம்பொனே அடியேன் படுதுயர்களையாய் பாசுப தாபரஞ் சுடரே 8

மட்டுலா மலர்கொண்(டு) அடியிணை வணங்கும் மாணிதன் மேல்மதியாதே,
கட்டுவான் வந்த காலனை மாளக் காலினால் ஆருயிர் செகுத்த,
சிட்டனே செல்வத் திருமுல்லை வாயிற் செல்வனே செழுமறைபகர்ந்த,
பட்டனே அடியேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே 9

சொல்லரும் புகழான் தொண்டைமான் களிற்றைச் சூழ்கொடி முல்லையாற் கட்டிட்(டு),
எல்லையில் இன்பம் அவன்பெற வெளிப்பட் டருளிய இறைவனே என்றும்,
நல்லவர் பரவுந் திருமுல்லை வாயில் நாதனே நரைவிடை ஏறீ,
பல்கலைப் பொருளே படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே 10

விரைதரு மலர்மேல் அயனொடு மாலும் வெருவிட நீண்ட எம்மானைத்,
திரைதரு புனல்சூழ் திருமுல்லை வாயிற் செல்வனை நாவலா ரூரன்,
உரைதரு மாலை ஒரைஞ்சி னோடைஞ்சும் உள்குளிர்ந் தேத்தவல் லார்கள்,
நரைதிரை மூப்பும் நடலையு மின்றி நண்ணுவர் விண்ணவர்க் கரசே 11

மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது

எட்டாம் திருமுறை

திருவாசகம்

சிவபுராணம்

திருவாசகத்தில் முதற்பாட்டாக விளங்குவது சிவபுராணம். புராணம் என்பதற்குப் பழைமை என்பது பொருள். சிவபெருமானது பழையனவாகிய பெருமைகளைக் கூறும் பாட்டு ஆதலின் சிவபுராணம் எனப்பெயர் பெற்றது.

திருவாசக நூலுக்குப் பாயிரம் போல அமைந்து நிற்பது சிவபுராணம். மங்கல வாழ்த்து, அவையடக்கம், நுதலிய பொருள், நூற்பயன் முதலிய பாயிர உறுப்புக்கள் பலவும் அமைய இம்முதற் பாட்டினை அருளிச் செய்துள்ளார் வாதவூரடிகள்.

முன்னுள்ள பதினாறு அடிகளில் வாழ்த்து, வெற்றி, போற்றி என்னும் மூவகையில் மங்கல வாழ்த்துக் கூறியுள்ளமை காணலாம்.

வினை நீங்கப் பெற்றாரும் உனது பெருமை முழுதினையும் அறிந்தாரல்லர், அவ்வாறிருக்கப் பொல்லா வினையேனாகிய யான் உனது பெருஞ்சீரினை முறையறிந்து முழுதும் எவ்வாறு சொல்வேன்? ஆயினும் உரைக்கும் அவாவினால் யான் கூறும் சிலவற்றை ஏற்றருள வேண்டும் என்கிறார். இஃது அவையடக்கமாய் அமைந்து நிற்றல் காணலாம்.

இறுதியடிகளில் நூற்பயன் கூறுகிறார். இதனை ஓதுவார் ஞானச்செல்வர் ஆவர். அவர் சிவனது இன்பவுலகத்தை அடைந்து அங்குள்ள தூய புலன்களை நுகர்வர். அவ்வுலகம் பதமுத்தி உலகம் எனப்படும். அவர் மீள நிலவுலகிற்கு வரவேண்டுவதில்லை. அவர் ஞானத்தை ஏற்கெனவே பெற்றவர் ஆதலின் அங்கிருந்தே பரமுத்தியாகிய வீட்டினைத் தலைப்படுவர் என்பது சொல்லாமலே பெறப்படும்.

நம் மணிவாசகப் பெருமான், அருளையே கண்ணாகக் கொண்டு இறைவனைக் கண்டு அனுபவித்த தம் நிலையினை *"அவனருளாலே அவன் தாள் வணங்கி"* எனப் புலப்படுத்தியுள்ளார். சிவபரம் பொருளைக்கண்டு அப்பொல்லாமணியைப் புல்லிப் புணர்ந்து மகிழ்ந்த மணிவாசகர் அம்மகிழ்ச்சி ஒழியாதிருக்க விரும்புகிறார். தலைவனாகிய சிவபெருமானது பெருமைகளை இடைவிடாது எண்ணுவதாலும், வாயாரப் பாடுவதாலும் அம்மகிழ்ச்சியை இடையறவின்றிப் பெறலாம். அப்பயன் கருதியே சிவபுராணத்தைப் பாடியதாகக் குறிக்கின்றார். சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை உரைப்பன் என்கின்றார்.

இது தவிர, மற்றொரு நோக்கமும் அடிகளுக்கு உண்டு. உடம்பு இருக்கும் வரையில் பிராரத்த வினையின் தாக்கமும் இருக்கும். ஆகவே மீட்டு இங்கு வாராமே பிறவி நீக்கமும், முந்தை வினை முழுதும் ஓயவும் வேண்டுகிறார். பிராரத்தம் முற்றக்கெடுதற்கு வழி, இறைவனை இடைவிடாது உணர்ந்து நிற்றலேயாம். அதன் பொருட்டுத் தாம் சிவபுராணத்தை உரைத்ததாகக் கூறுகின்றார்.

"முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன்" என்ற அடியில் இக்கருத்தினைக் காணலாம்.

எனவே, இறையின்பம் ஒழியாதிருக்கும் பொருட்டும், பிராரத்தம் சிறிதும் தாக்காமைப் பொருட்டுமே அவர் சிவபுராணத்தைப் பாடினார் என்பது நன்கு புலனாகும்.

வீடு பேறு பெற உதவும் இத்திருப்பதிகத்தை, தனித்திருந்தும், அடியார்களுடன் கூடியும், இல்லத்தாருடன் இணைந்தும் ஓதுவதற்கு ஏற்ற வகையில் ஆளுடை அடிகள் அருளியுள்ளார்.

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சின் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தை நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடி போற்றி

ஆராதஇன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள்நின்ற அதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலாற் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொண்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவரசங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை யகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற்போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோறும் ஒன்பது வாயிற்குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தஅந் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற்சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்தொளிக்கும் ஒளியானே
நீராயுருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே யுள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணாரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்

அன்னைப்பத்து

இறைவன் மீது காதல் கொண்ட தலைவி அவன் நினைவால் மெலிந்து வாடுகிறாள். தலைவியின் வேறுபாடு கண்ட செவிலித்தாய் தோழியிடம் வினவுகிறாள். அதற்குத் தோழி கூறும் மறுமொழியாக இப்பாடல்கள் அமைகின்றன. தலைவி என்னிடம் இறைவனைக் குறித்து இப்படி இப்படிச் சொல்லுவாள் என்று கூறுகிறாள் தோழி.

என்னும் என்ற சொல் பாடல் தோறும் பயின்று வந்துள்ளது. என்னும் என்பதற்கு என்று எப்பொழுதும் சொல்லுவாள் என்பது பொருள். அன்னே என்பது தலைவி தோழியை அழைக்கும் சொல்லாகும். அன்னையே என்பது அதன் பொருள். தலைவி தோழியை அன்னையே என அழைத்து அவளிடம் தலைவனைப் பற்றி உரைத்தவற்றையெல்லாம் இப்பொழுது தோழி செவிலித்தாய்க்கு வெளியிடுகிறாள்.

இறைவர் செவ்வண்ண மேனியர் : வெண்ணீறு அணிந்தவர் : வேதமாகிய சொல்லை உடையவர் : நீண்ட கையினர் : நெறிந்த சடையினை உடையவர் : என்றும் மணக்கோலம் கொண்டுள்ளவர் : நிரம்பிய அழகினை உடையவர் : எனது கண்ணிடத்து உள்ளவர் : சிந்தையில் இருப்பவர் : கடல் போன்ற கருணையுடையவர்: என்னை உள்நின்று உருக்கி ஆனந்தக் கண்ணீரை வருவிப்பவர் : பல வழியிலும் ஓடுகின்ற உள்ளத்தை ஒரு வழிப்படுத்தி ஆட்கொண்டு என்பால் அன்பு செய்பவர். ஒரு பங்கில் மங்கையை உடைய அவர் துறவுக் கோலமும் உடையவராயிருத்தல் விந்தையே. அவரது தலையில் உள்ள ஊமத்த மலர் எனக்கு உன்மத்தம் தருவதாய் இருப்பது என்ன வியப்பு!. இப்படியெல்லாம் தலைவி தனது காதல் மிகுதியால் தலைவனேயே நினைந்து அவனது சிறப்பையும் அருள் திறத்தையும் பேசுகிறாள் எனத்தோழி செவிலியிடம் கூறுவதாக இத்திருப்பதிகம் அமைந்துள்ளது.

அடிகள் தன் சிவானுபவத்தை தோழியின் கூற்றாக வெளிப்படுத்தியுள்ளார்

திருச்சிற்றம்பலம்

வேத மொழியர்வெண் ணீற்றர்செம் மேனியர்
நாதப் பறையினர் அன்னே என்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கும்
நாதர்இந் நாதனார் அன்னே என்னும் 1

கண்ணஞ் சனத்தர் கருணைக் கடலினர்
உள்நின் றுருக்குவர்அன்னே என்னும்
உள்நின் றுருக்கி உலப்பிலா ஆனந்தக்
கண்ணீர் தருவரால் அன்னே என்னும் 2

நித்த மணாளர் நிரம்ப அழகியர்
சித்தத் திருப்பரால் அன்னே என்னும்
சித்தத் திருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தர்ஆ னந்தரால் அன்னே என்னும் 3

ஆடரப் பூணுடைத் தோல்பொடிப் பூசிற்றோர்
வேடம் இருந்தவா றன்னே என்னும்
வேடம் இருந்தவா கண்டுகண் டென்னுள்ளம்
வாடும் இதுஎன்னே அன்னே என்னும் 4

நீண்டகரத்தர் நெறிதரு குஞ்சியர்
பாண்டிநன் னாடரால் அன்னே என்னும்
பாண்டிநன் னாடர் பரந்தெழு சிந்தையை
ஆண்டன்பு செய்வரால் அன்னே என்னும் 5

உன்னற் கரியசீர் உத்தர மங்கையர்
மன்னுவ தென்நெஞ்சில் அன்னே என்னும்
மன்னுவ தென்நெஞ்சில் மாலயன் காண்கிலார்
என்ன அதிசயம் அன்னே என்னும் 6

வெள்ளைக் கலிங்கத்தர் வெண்திரு முண்டத்தர்
பள்ளிக்குப் பாயத்தர் அன்னே என்னும்
பள்ளிக்குப் பாயத்தர் பாய்பரி மேற்கொண்டென்
உள்ளம் கவர்வரால் அன்னே என்னும் 7

தாளி அறுகினர் சந்தனச் சாந்தினர்
ஆளெம்மை ஆள்வரால் அன்னே என்னும்
ஆளெம்மை ஆளும் அடிகளார் தங்கையில்
தாள மிருந்தவா றன்னே என்னும் 8

தையலோர் பங்கினர் தாபத வேடத்தர்
ஐயம் புகுவரால் அன்னே என்னும்
ஐயம் புகுந்தவர் போதலும் என்னுள்ளம்
நையும்இதுஎன்னே அன்னே என்னும் 9

கொன்றை மதியமும் கூவிள மத்தமும்
துன்றிய சென்னியர் அன்னே என்னும்
துன்றிய சென்னியின் மத்தம்உன் மத்தமே
இன்றெனக் கானவா றன்னே என்னும் 10

திருச்சிற்றம்பலம்

கோயில் திருப்பதிகம்

அனுபோக இலக்கணம்

இத்திருப்பதிகத்தில் அடிகள் தமது இறையனுபவத்தினை விளக்கியிருத்தல் காணலாம்.

நீ எல்லாப் பொருளிலும் கலந்து மறைந்து நிற்கின்றாய் இங்ஙனம் ஒருவர்க்கும் தோன்றாமல் நிற்கின்ற உன்னை நான் என் கண்ணாரக் கண்டு களித்தேன். உன்னை அடைந்த எனக்கு இனி என்ன குறை? இன்பமே வடிவான நீ இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காமல் நிற்பதால் உன்னிடத்தில் யான் வேண்டிக்கொள்ளத்தக்கது என்ன இருக்கிறது? இவ்வுலகத்தில் எனக்கு உறவினர் என்றும், அயலவர் என்றும் யாரும் இல்லை. நீயே எனக்கு எல்லாம் என்று கனிந்து கூறுகின்றார்.

இறைவன் தன்னடியார்க்குத் தன்னையே தருகின்றான். அவர்தம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் தன்னுடையனவாக ஏற்றுக் கொண்டு, அவர்க்கு யாதொரு துன்பமும் வராமல் காக்கின்றான். அவர் மேல் வைத்த கருணை காரணமாக இறைவன் செய்யும் இச்செயலை நயம்பட அமைத்துக் கூறுகின்றார் நம் அடிகள் : பண்டமாற்றில் ஒன்றைக் கொடுத்து மற்றொன்றைக் கொள்வர். அம்முறையில் நீ உன்னைத் தந்தாய் அதற்கு மாற்றாக என்னைக் கொண்டாய். இப்பண்டமாற்றில் யார் மிகப் பயன் பெற்றவர்? உன்னைத் தந்ததனால் யான் அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன். நீ என்னைக் கொண்டதனால் உனக்கு என்ன பயன்? ஒன்றுமில்லை. இவ்வகையில் யானே திறனுடையவன் ஆனேன் என்று வேடிக்கையாகக் கூறி இறைவனது கைம்மாறு கருதாத கருணைத் திறத்தினை எடுத்துப் போற்றுகின்றார்.

இத்திருப்பதிகத்தில் உள்ள ஏழாவது பாட்டினை மிகவும் முதன்மை வாய்ந்ததாகக் கருதுவர் பெரியோர் அதில்வரும் **சென்று சென்று** என்ற தொடர், உயிர் பாசக் கூட்டத்தினின்றும் சிறிது சிறிதாக நீங்குதலைக் குறிக்கும். பாசச் சார்பு நீங்கி இறைவனைச் சார்ந்த உயிர் அவனையன்றி வேறொரு பொருளை அறிதலுமில்லை : விரும்புதலுமில்லை : அனுபவித்தலும் இல்லை : உலக அனுபவம் இல்லாதொழியும் என்பதையே **தேய்ந்து தேய்ந்து** என்ற தொடர் குறிக்கும்

உலக அனுபவம் இல்லையாக, அஃது இறைவனையே அறிந்து அனுபவிக்கும்; உலகை மறந்து, தன்னையே தான் மறந்து இறையனுபவத்தில் அழுந்தி நிற்கும் வெள்ளமெனப் பெருகும் இறையின்பத்தில் மூழ்கி உயிரானது சிறிதும் புலனாகாது நிற்கும் என்பதைக் குறிக்கவே உயிரை அணு என்றார்

இம்முத்தி நிலையில் உயிரும் சிவமும் உள்ளன. ஆயின் பிரித்தறிய வாராது ஒன்றாய் உள்ளன. உயிர் சிவனது திருவருள் வியாபகத்துள் அடங்கித் தனித்த ஒரு முதலாய்க் காணப்படாது நிற்றலே உயிர் சிவத்தோடு ஒன்றாதல் ஆம்.

உயிர் சிவத்தொடு ஒன்றாகி, இல்லாமற் போய்விடவில்லை. ஒன்றாதல் என்பதற்கு ஒற்றித்து நின்று உணர்தல் என்பதே பொருள். எனவே உயிர் சிவத்தோடு ஒன்றி நின்று அதனையே இடைவிடாது உணர்ந்து அநுபவிக்கின்றது. இவ்வாறு முத்தியில் உயிர் ஒன்றிநின்று தன்னை உணரும்படியாக நிற்கின்ற சிவன் என்பதே ஒன்றாம் திருப்பெருந்துறையுறை சிவனே என்பதன் பொருளாகும்.

நம் அடிகள் சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம் திருப்பெருந்துறை சிவனே என்ற அடியில் பரம சித்தாந்தக் கருத்தை அருளிச்செய்துள்ளார்.

"ஒன்றி நீ அல்லை! அன்றி ஒன்று இல்லை" என்னும் தொடர் நாம் உணர வேண்டிய மாபெரும் உண்மையாகும்.

திருச்சிற்றம்பலம்

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடை அன்பே. 1

அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனோர் கைம்மாறு
முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந்துறையாய் சிவபெருமானே
சீருடைச் சிவபுரத் தரைசே 2

அரைசனே அன்பர்க் கடியனே னுடைய
அப்பனே ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோர் உணர்வே
யானுன்னை உரைக்குமா றுணர்த்தே 3

உணர்ந்தமா முனிவர் உம்பரோ டொழிந்தார்
உணர்வுக்கும் தெரிவரும் பொருளே
இணங்கிலி எல்லா உயிர்கட்கும் உயிரே
எனைப்பிறப் பறுக்குமெம் மருந்தே
திணிந்ததோர் இருளில் தெளிந்ததூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கள்தா மில்லா இன்பமே உன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே 4

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் உடலிடம் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் கேனே 5

இரந்திரந் துருக என்மனத் துள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனில் பொலியும் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தஆ காயம் நீர்நிலம் தீகால்
ஆயவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டுகொண் டின்றே 6

இன்றேனக் கருளி இருள்கடிந் துள்ளத் (து)
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற்றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்று நீயல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே. 7

பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதேல் அரிய
நின்மலா நின்னருள் வெள்ளச்

சீருறுசிந்தை எழுந்ததோர் தேனே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆருற வெனக்கிங் காரயல் உள்ளார்
ஆனந்தம் ஆக்குமென் சோதி. 8

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் இணையடி தந்தே. 9

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்?
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்?
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்
யான்இதற் கிலன்ஓர் கைம் மாறே. 10

திருச்சிற்றம்பலம்

யாத்திரைப்பத்து

அனுபவ அதீதம் உரைத்தல்

அடிகள் தில்லையில் தங்கியிருந்தபொழுது இறைவன் தம்மை அழைத்துக் கொள்ளும் காலம் வந்து விட்டது என்பதைக் குறிப்பால் உணர்ந்து மகிழ்ச்சியுற்று உடனிருந்த அடியார்களை நோக்கி இத்திருப்பதிகத்தை அருளிச் செய்கின்றார். இங்கு யாத்திரை என்றது சிவலோக யாத்திரையாகும்.

இறைவனுக்கு அன்பாய் ஆட்பட்டவர்களே! நிலையில்லாத உடம்பைவிட்டு அவனது திருவடியிற் புகக்காலம் வந்துவிட்டது. சிவபுரத்திற்கு யாத்திரையாகப் புறப்படுவோம். ஒருப்படுங்கள். இறைவனுக்கு முன்னே உயிர்களாகிய நாமெல்லாம் ஒரு பொருளோ? உலகப் பொருள்களும் ஒரு பொருளோ? இறைவனை மறந்து தன்னைத் தலைமைப் பொருளாகவும் உலகப் பொருள்களைத் தன்னுடைய பொருளாகவும் கருதுதல் எத்துணை மயக்கம்! ஆதலால் இவற்றின் மேல் பற்றுச் செய்தலை விடுத்துப் போவோம்.

ஆசையையும் வெகுளியையும் விட்டு விடுங்கள் ; உயர்வடைவதற்கு இக்காலத்தை விட்டால் வேறொரு காலம் இனி வாய்க்காது. சிவபுரத்தில் திருக்கதவம் சாத்தப்படுமுன் நாம் போய்ச் சேர்தல் வேண்டும். நிலையில்லாத உலகில் நிற்க விரும்புவோர் நிற்பாராக. நாம் இனி நில்லோம் ; ஆள்வான் பொன்னடிக்கே செல்வோம். இப்பொழுதே உடன் வருவதற்கு இசையாமல் நின்றால் பின்னால் வருந்துவீர்கள். தாமதித்தால் பெருமான் பெருதற்கரியவன். ஆதலால் காலம் தாழாது ஒருப்படுங்கள். சிவபுரத்துத் திருக்கதவம் திறந்த போதே திருத்தாள் சென்று சேர்வோம்.

இன்றே வந்து இறைவனுக்கு ஆளாகமல் நிற்பீர்! இவ்வாறு இருப்பின் உம்மை மதிப்பார் யார்? மதிகலங்கி மயங்குவீர்! சிவபெருமானது திருவருள் யார் பெறுவார்! அந்தோ! இது பெறலரும் பேறு என்பதைத் தெளியுங்கள். தெளிந்து, அவன் அழைக்கும் போதே அவனை அடைதலைச்செய்யுங்கள்.

இவ்வாறு அடியார்களை அழைத்துக் கூறுகிறார். உலகர்க்கு அடிகள் கூறும் உபதேசப் பதிகமாக இது திகழ்கிறது ; அந்தாதியாகவும் அமைந்துள்ளது. பதிகக்கருத்தை மனதில் கொண்டு அடிகள் பாடியவற்றுள் இதுவே இறுதியானதாகும் என்பர் சில ஆய்வாளர்கள்.

திருச்சிற்றம்பலம்

பூவார் சென்னி மன்னனெம்
புயங்கப் பெருமான் சிறியோமை
ஓவா துள்ளம் கலந்துணர்வாய்
உருக்கும் வெள்ளக் கருணையினால்
ஆவா என்னப் பட்டன்பாய்
ஆட்பட்டீர்வந் தொருப் படுமின்
போவோம் காலம் வந்ததுகாண்
பொய்விட் டுடையான் கழல்புகவே 1

புகவே வேண்டா புலன்களில்நீர்
புயங்கப்பெருமான் பூங்கழல்கள்
மிகவே நினைமின் மிக்கவெல்லாம்
வேண்டா போக விடுமின்கள்
நகவே ஞாலத் துள்புகுந்து
நாயே அனைய நமையாண்ட
தகவே யுடையான் தனைசாரத்
தளரா திருப்பார் தாந்தாமே 2

தாமே தமக்குச்சுற்றமும்
தாமே தமக்கு விதிவகையும்
யாமார் எமதார் பாசமார்
என்ன மாயம் இவைபோகக்

கோமான் பண்டைத் தொண்டரொடும்
அவன்தன் குறிப்பே குறிக்கொண்டு
போமா றமைமின் பொய்நீக்கிப்
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே 3

அடியார் ஆனீர் எல்லீரும்
அகல விடுமின் விளையாட்டைக்
கடிசே ரடியே வந்தடைந்து
கடைக்கொண் டிருமின் திருக்குறிப்பைச்
செடிசே ருடலைச் செலநீக்கிச்
சிவலோ கத்தே நமைவைப்பான்
பொடிசேர் மேனிப் புயங்கன் தன்
பூவார் கழற்கே புகுவிடுமே 4

விடுமின் வெகுளி வேட்கைநோய்
மிகவோர் காலம் இனியில்லை
உடையான் அடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோடு
உடன் போவதற்கே ஒருப்படுமின்

அடைவோம் நாம்போய்ச் சிவ
புரத்துள் அணியார்கதவ தடையாமே
புடைபட் டுருகிப் போற்றுவோம்
புயங்கன் ஆள்வான் புகழ்களையே. 5

புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்
புயங்கன் தாளே புந்திவைத்திட்டு
இகழ்மின் எல்லா அல்லலையும்
இனியோர் இடையூ றடையாமே
திகழும் சீரார் சிவபுரத்துச்
சென்று சிவன்தாள் வணங்கிநாம்
நிகழும் அடியார் முன்சென்று
நெஞ்சம் உருகி நிற்போமே 6

நிற்பார்நிற்க நில்லாவுலகில் நில்லோம்
இனி நாம் செல்வோமே
பொற்பால் ஒப்பாம் திருமேனிப்
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே
நிற்பீர் எல்லாம் தாழாதே
நிற்கும் பரிசே ஒருப்படுமின்
பிற்பால் நின்று பேழ்கணித்தால்
பெறுதற் கரியன் பெம்மானே. 7

பெருமான் பேரா னந்தத்துப்
பிரியா திருக்கப் பெற்றீர்காள்
அருமா லுற்றுப் பின்னைநீர்
அம்மா அழுங்கி அரற்றாதே
திருமா மணிசேர் திருக்கதவம்
திறந்தே போதே சிவபுரத்துத்
திருமா லறியத் திருப்புயங்கன்
திருத்தாள் சென்று சேர்வோமே 8

சேரக் கருதிச் சிந்தனையைத்
திருந்த வைத்துச் சிந்திமின்
போரிற் பொலியும் வேற்கண்ணாள்
பங்கன் புயங்கன் அருளமுதம்
ஆரப் பருகி ஆராத
ஆர்வம் கூர அழுந்துவீர்
போரப் புரிமின் சிவன் கழற்கே
பொய்யில் கிடந்து புரளாதே 9

புரள்வார் தொழுவார் புகழ்வாராய்
இன்றே வந்தாள் ஆகாதீர்
மருள்வீர் பின்னை மதிப்பாரார்
மதியுட் கலங்கி மயங்குவீர்
தெருள்வீ ராகில் இதுசெய்மின்
சிவலோ கக்கோன் திருப்புயங்கன்
அருளார் பெறுவார் அகலிடத்தே
அந்தோ அந்தோ அந்தோவே. 10

திருச்சிற்றம்பலம்

திருக்கோவையார்

திருவளர் தாமரை சீர்வளர்
காவிக ளீசர் தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங்
காந்தள்கொண் டோங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியி
னொல்கி யனநடைவாய்ந்து
உருவளர் காமன்றன் வென்றிக்
கொடி போன்று ஒளிர்கின்றதே 1

ஆனந்த வெள்ளத் தழுந்துமோர்
ஆருயிர் ஈருருக்கொண்டு
ஆனந்த வெள்ளத் திடைத்திளைத்தால்
ஒக்கும் அம்பலம்சேர்
ஆனந்த வெள்ளத்து அறைகழலோன்
அருள் பெற்றவரின்
ஆனந்த வெள்ளம் வற்றாது முற்றாது
இவ் வணிநலமே 2

திருச்சிற்றம்பலம்

ஒன்பதாம் திருமுறை

திருவிசைப்பா

(சேந்தனார் அருளியது)

திருச்சிற்றம்பலம்

கங்கைநீர் அரிசிற் கரையிரு மருங்கும்
கமழ்பொழில் தழுவிய கழனித்
திங்கள்நேர் தீண்ட நீண்டமா ளிகைசூழ்
மாடநீ டுயர்திரு வீழித்
தங்குசீர்ச் செல்வத் தெய்வத்தான் தோன்றி
நம்பியைத் தன்பெருஞ் சோதி
மங்கையோர் பாகத்(து) என்னரு மருந்தை
வருந்தி நான் மறப்பனோ? இனியே.

திருச்சிற்றம்பலம்

திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு
பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்?
ஊரும் உலகுங் கழற
உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்

பத்தாம் திருமுறை

திருமந்திரம்

திருச்சிற்றம்பலம்

கொம்பனை யாளைக் குவிமுலை மங்கையை
வம்பவிழ் கோதையை வானவர் நாடியைச்
செம்பவ ளத்திரு மேனிச் சிறுமியை
நம்பிஎன் உள்ளே நயந்துவைத் தேனே.

ஏடங்கை நங்கை இறை எங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும்வெண் டாமரை
பாடுந் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
சூடுமின்சென்னிவாய்த் தோத்திரஞ்சொல்லுமே

திருச்சிற்றம்பலம்

பதினோராந் திருமுறை

கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர்பெண்பேய்
தங்கி அலறி உலறு காட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும்வீசி
அங்கங்குளிர்ந்தனல் ஆடும்எங்கள்
அப்பன் இடம்திரு ஆலங்காடே

காரைக்கால் அம்மையார்

சிந்தனை செய்ய மனம் அமைத்தேன்
செப்ப நாஅமைத்தேன்
வந்தனை செய்யத் தலை அமைத்தேன்
கைதொழ அமைத்தேன்
பந்தனை செய்வதற்கு அன்பமைத்தேன்
மெய்அரும்ப வைத்தேன்
வெந்த வெண்ணீறணி ஈசற்கு
இவையான் விதித்தனவே.

சேரமான் பெருமாள் நாயனார்

பன்னிரண்டாம் திருமுறை

பெரியபுராணம்

தெய்வச் சேக்கிழார் பெருமான் அருளியது

திருச்சிற்றம்பலம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

நன்மைபெரு கருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந்து எழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்று அவர்தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்

திருச்சிற்றம்பலம்



உமையொரு பாகம் உடையானை கூற என் உள்ளம் குளிரும்மே

திருச்சிற்றம்பலம்

உண்ணாமுலை **உமையாளொடும்** உடன்ஆகிய ஒருவன்
பெண்ஆகிய பெருமான் மலை திரு மாமணி திகழ
மண்ஆர்ந்தன அருவித்திரள் மழலை முழவுஅதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே.

பண்ண வண்ணத்தர் ஆகிப் பாடலொடு ஆடல் அறாத
விண்ண வண்ணத்தர் ஆய விரி புகலூர் **ஓர்பாகம்**
பெண்ண வண்ணத்தர் ஆகும் பெற்றியொடு ஆண் இணை பிணைந்த
வண்ண வண்ணத்து எம்பெருமான் வர்த்தமானீச்சரத்தாரே.

சந்தம் ஆர் அகிலொடு சாதி தேக்கம்மரம்
உந்தும் மா முகலியின் கரையினில் **உமையொடும்**
மந்தம் ஆர் பொழில் வளர் மல்கு வண் காளத்தி
எந்தையார் இணைஅடி என் மனத்து உள்ளவே.

செல்வியை பாகங்கொண்டார் சேந்தனை மகனாக் கொண்டார்
மல்லிகைக் கண்ணியோடு மாமலர்க் கொன்றை சூடிக்
கல்வியைக் கரையிலாத காஞ்சிமா நகர்தன்னுள்ளால்
எல்லியை விளங்க நின்றார் இலங்குமேற் றளியனாரே

பூமென் கோதை **உமையொரு பாகனை**
ஓமஞ் செய்தும்உ ணர்மின்கள் உள்ளத்தால்
காமற் காய்ந்தபி ரான்கடம் பந்துறை
நாமம் ஏத்தநம் நீவினை நாசமே

உருத்திரனை **உமாபதியை** உலகானானை
உத்தமனை நித்திலத்தை ஒருவன் தன்னைப்
பருப்பதத்தை பஞ்சவடி மார்பினானைப்
பகலிரவாய் நீர்வெளியாய்ப் பரந்து நின்ற
நெருப்பதனை நித்திலத்தின் தொத்தொப்பானை
நீறணிந்த மேனியராய் நினைவார்சிந்தைக்
கருத்தவனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந்தேனே.

செண்டாடும் விடையாய் சிவனேயென் செழுஞ்சுடரே
வண்டாரும் குழலாள் **உமைபாகம் மகிழ்ந்தவனே**
கண்டார் காதலிக்கும் கணநாதனெங் காளத்தியாய்
அண்டா உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே.

உடையாள் உன்தன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீ இருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால்
அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரியாய் பொன்னம்பலத்துஎம்
முடியா முதலே என்கருத்து முடியும்
வண்ணம் முன்நின்றே

காரணி கற்பகங் கற்றவர்
நற்றுணை பாணரொக்கல்
சீரணி சிந்தா மணியணி
தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் தக்கோர்
தஞ்சங்க நிதிவிதிசேர்
ஊருணி உற்றவர்க் கூரன்மற்று
யாவர்க்கும் ஊதியமே

மையல் மாதொரு கூறன் மால்விடை
ஏறிமான்மறி யேந்தியதடங்
கையன்கார்புரை யுங்கறைக்
கண்டன் கனல்மழுவான்
ஐயன்ஆரழ லாடுவான் அணி
நீர்வயல்தில்லை அம்பலத்தான்
செய்யபாதம் வந்தென்
சிந்தையுள்ளிடங் கொண்டனவே.

மன்னுக தில்லை! வளர்கநம்
பத்தர்கள்! வஞ்சகர் போய்அகல!
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் **உமைகோன்**
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

ஆலிக்கும் கன்னி அரிவை மனோன்மணி
பாலித்து உலகில் பரந்து பெண்ணாகும்
வேலைத் தலைவியை வேதமுதல்வியை
ஆலித்து ஒருவன் உகந்து நின்றானே.

பண்பு உணரமாட்டேன் நீயே பணித்துக் காண்
கண் புணரும் நெற்றிக் கறைக் கண்டா பெண்புணரும்
அவ்வுருவோ? மாலுருவோ? ஆனேற்றாய்! நீறணிவது
எவ்வுருவோ நின்னுருவமேல்?

சடைமருங்கில் இளம்பிறையும் தனிவிழிக்குந் திருநுதலும்
இடமருங்கில் உமையாளும் எம்மருங்கும் பூதகணம்
புடைநெருங்கும் பெருமையும் முன் கண்டரசன் போற்றிசைப்ப
விடைமருவும் பெருமானும் விறல்வேந்தற் கருள்கொடுத்தான்.

திருச்சிற்றம்பலம்



திருத்தொண்டர் புராணத்துள் முருகன்

சிவபெருமான் திரு அருளையே முன்வைத்து தெய்வச் சேக்கிழார் பெருமான் அடியார்களின் பெருமையை கூறும் நூலாக பெரிய புராணத்தை அமைத்திருந்தும், ஆங்காங்கே உமையம்மை, விநாயகர், முருகன், வைரவர் முதலிய மூர்த்திகளின் சிறப்புகளையும் அந்நூலில் குறிப்பிட்டுள்ளார்.

முருகப்பெருமான் அறுமுகக் கடவுளாகும். இதற்குப் பொருத்தமாக, முருகப்பெருமானைப் பற்றிய குறிப்பை பெரிய புராணத்தில் கீழ்க்கண்ட ஆறு இடங்களில் காணலாம்.

1. தடுத்தாட்கொண்ட புராணம்
"முன்னேவந் தெதிர் தோன்று முருகனோ"(பரவையார் முன் சுந்தரர் தோன்றியது)

2. கண்ணப்ப நாயனார் புராணம்
செவ்வேல் முருகவேள் முன்றிற் சென்று(கண்ணப்பர் தந்தை பிள்ளை வரம் பெற்றது)
பரவுதல் செய்து நாளும் பராய்க்கட னெறியினிற்பார்

3. திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம்
எஞ்சலின்றி முன் றிரியவுங் குன்ற (காஞ்சியை முருகன் காவல் செய்தது)
மெறிந்த வேலன் காக்கவு மிசையும்

4. சண்டீசுர நாயனார் புராணம்
ஏந்து மயில்வே னிலைகாட்டி யிமையோர் ரிகல்வெம்பகை கடக்கும்
சேந்தன் அளித்த திருமறையோர் மூதூர் செல்வச் சேய்ஞலூர் (ஊர் சிறப்பு)

5. திருஞான சம்பந்த நாயனார் புராணம்
தாமரை மிசை தணிமுதல் குழலியென (திருஞான சம்பந்தரை தொட்டிலில் இடுவது)
தூமணி நிரைத்தணிசெய் தொட்டில் அமர்வித்தார்

6. சிறுத்தொண்ட நாயனார் புராணம் (சிறுத்தொண்டருக்கு அருள்புரிதல்)
மையல்கொண்டு புறத்தணைய மறைந்த அவர்தாம் மலைபயந்த
தையலோடும் சரவணத்துத் தனையரோடும் தாம் அணைவார்.

முருகப்பெருமான் ஆணவத்தில் ஆழ்ந்து கிடக்கும் உயிர்களுக்கு அருள்புரிபவன், அறிவுபெற்ற உயிர்கள் கேட்கும் வரன்கள் அருள்பவன், பெற்ற வரங்களை அனுபவிக்கும் பொருட்டு உலகில் நிகழும் வேள்விகளைக் காப்பவன், அதன்பின் உயிர்களுக்கு காவல் புரியும் அறிவு விளக்கம் செய்பவன், இவ்வாறு பக்குவப்பட்ட உயிர்களுக்கு துன்பங்களை நீக்கி இன்பங்களைத் தருபவன், எல்லாவற்றுக்கும் மேலாக பேரின்பத்தையும் தரக்கூடியவன். இதை ஒத்தே, பெரியபுராணத்தில் முருகன் பற்றிய குறிப்புகள் அமைந்துள்ளதை நாம் அறியலாம்.

திருச்சிற்றம்பலம்

திருப்பாசுரம்

வாழ்க அந்தணர், வானவர், ஆனினம்;
வீழ்க தண்புனல்; வேந்தனும் ஓங்குக;
ஆழ்க தீயது; எல்லாம் அரன் நாமமே
சூழ்க; வையகமும் துயர் தீர்கவே.

வேதமுதல்வன் முதல் ஆக விளங்கி வையம்
ஏதப்படாமை உலகத்தவர் ஏத்தல் செய்யப்
பூதமுதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை என்றே கலிக்கோவை சொல்லே 8

பார் ஆழி வட்டம் பகையால் நலிந்து ஆட்டவாடிப்
பேர் ஆழியானது இடர்கண்டு அருள்செய்தல் பேணி
நீர் ஆழி விட்டு ஏறி நெஞ்சுஇடம் கொண்டவர்க்குப்
போர் ஆழி ஈந்த புகழும் புகழ் உற்றது அன்றே 9

மாலாய் அவனும் மறைவல்ல நான்முகனும்
பாலாய தேவர் பகரில் அமுது ஊட்டல் பேணிக்
காலாய முந்நீர் கடைந்தார்க்கு அரிது ஆய் எழுந்த
ஆலாலம் உண்டு அங்கு அமரர்க்கு அருள் செய்ததுஆமே. 10

அற்று அன்றி அம் தண் மதுரைத் தொகை ஆக்கினானும்
தெற்று என்ற தெய்வம் தெளியார் கரைக்கு ஓலை தெண்நீர்ப்
பற்றுஇன்றிப் பாங்கு எதிர்வின் ஊரவும் பண்பு நோக்கில்
பெற்று ஒன்று உயர்த்த பெருமான் பெருமானும் அன்றே 11

நல்லார்கள் சேர் புகலி ஞானசம்பந்தன் நல்ல
எல்லார்களும் பரவும் ஈசனை ஏத்து பாடல்
பல்லார்களும் மதிக்கப் பாசுரம் சொன்ன பத்தும்
வல்லார்கள் வானோர்உலகு ஆளவும் வல்லர் அன்றே 12

திருச்சிற்றம்பலம்

கூவுமின்! தொழுமின்!

திருச்சிற்றம்பலம்

ஏகம்பத்துறை எந்தாய் போற்றி !
பாகம் பெண்ணுருவானாய் போற்றி !
மானேர் நோக்கி மணாளா போற்றி !
வானகத் தமரர் தாயே போற்றி !
மஞ்சா போற்றி ! மணாளா போற்றி !
பஞ்சேர் அடியாள் பங்கா போற்றி !
கூரிருட் கூத்தொடு குனிப்போன் வாழ்க !
பேரமைத் தோளி காதலன் வாழ்க !
பெண் ஆண் அலியெனும் பெற்றியன் காண்க !
கண்ணால் யானும் கண்டேன் காண்க !
அருள் நனி சுரக்கும் அமுதே காண்க !
கருணையின் பெருமை கண்டேன் காண்க !
குவளைக் கண்ணி கூறன் காண்க !
அவளும் தானும் உடனே காண்க !

நறுங்குழல் நாயகி உடனாகிய எறும்பியூர் ஈசன் இணையடிகள் போற்றி !
ஒப்பில்லா நாயகி உடனாகிய நெடுங்களநாதர் திருவடிகள் போற்றி !
மட்டுவார் குழலி அம்மன் உடனாகிய தாயுமானசுவாமி மலரடிகள் போற்றி !
அலங்கார வல்லி உடனாகிய ஆனிலையப்பர் அருள் சேவடிகள் போற்றி !
காவாய்க் கனகத் திரளே போற்றி !
கயிலை மலையானே போற்றி ! போற்றி !

திருச்சிற்றம்பலம்

புவனா பிரிண்டர்ஸ், கள்ளத்தெரு, திருச்சி : 8. போன் : 701578, 703919.

திருச்சிற்றம்பலம்

நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே



தொண்டர் சீர் பரவும் எங்கள் பாக்கியப் பயனாம்

ர்வைச் சேக்கிழார் பெருமான் சீரடிகள் போற்றி ! போற்றி !